பக்கங்கள் : எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 ஐப்பசி 23 வெள்ளிக்கிழமை (09.11.2007) UTHAYAN-A Lively National Tamil Daily இதழ்: 343

### தமிழ்ச்செல்வனின் படுகொலை போர்நிறுத்த மீறல்

# இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக அனைத்துலகின் உதவியுடன் நடவடிக்கை

## நோர்வேயிடம் புலிகள் வலியுறுத்து

கிளிநொச்சி,நவம்பர் 9


புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனின் படுகொலை தொடர்பாக, அனைத்துலக நாடுகளின் உதவியுடன் இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக நோர்வே நடவடிக்கை எடுக்கவேண்டும்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவருடாக தமிழீழ விடுதலைப் புலிகள் இவ்வாறு வலியுறுத்தியுள்ளனர்.

தமிழ்ச்செல்வனின் படுகொலையின் பின்னர் முதல் தடவையாக நேற்றுக் கிளிநொச்சிக்கு விஜயம் செய்த கண்காணிப்புக்குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் லார்ஸ் ஜோன் சொல்பேர்க் ஊடாக நோர்வேக்கு இந்தச் செய்தி அனுப்பப்பட்டுள்ளது.

தமிழீழ அரசியல் துறைப் பொறுப் பாளர் பா.நடேசனை இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் லார்ஸ் ஜோன் செல்பேர்க் நேற்று வியாழக் கிழமை கிளிநொச்சியில் சந்தித்துப் பேசினார். இந்தச் சந்திப்பு கிளிநொச்சியில் உள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறை நடுவப்பணியகத்தில் காலை 9 மணிமுதல் முற்பகல் 11 மணிவரை நடைபெற்றது.

(08 ஆம் பக்கம் பார்க்க)



## ஊரடங்குச் சட்டம் இருமணிநேரம் தளர்வு

யாழ்ப்பாணம்,நவ.9

குடாநாட்டில் நடைமுறைப்படுத்தப்படும் ஊரடங்கு நேற்றுத் தொடக்கம் இருமணிநேரம் தளர்த்தப்பட்டுள்ளது என்று பலாலி ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்தது.

இரவு 9 மணிமுதல் அதிகாலை 4.30 மணிவரை ஊரடங்கு நடைமுறையில் இருக்கும் என மேலும் தெரிவிக்கப்பட்டது.

இதுவரை காலமும் இரவு 7 மணிமுதல் அதிகாலை 4.30 மணிவரை ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தமை தெரிந்ததே. (அ-1)

## புலிகளின் ஆயுதக் கடத்தலைத்தடுக்க நவீன கடற் கண்காணிப்புத் தளபாடம்

### திருமலையில்வைத்து அமெரிக்கத்தூதுவர் கையளிப்பு

திருகோணமலை,நவ.9

விடுதலைப்புலிகளின் ஆயுதக் கடத்தலைத் தடுப்பதற்காக நவீன ராடர் வசதி கொண்ட கடற் கண்காணிப்புத் தளபாடங்களையும் திடீரென மிதக்கும் கண்காணிப்புப் படகுகளையும் அமெரிக்கா இலங்கை அரசாங்கத்துக்குவழங்கியுள்ளது.

இந்த ஆயுதத்தளபாடங்களை கையளிக்கும் வைபவம் நேற்று திரு கோணமலை கடற்படைத் தளத்தில் இடம் பெற்றது.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் றெபேட் ஓ பிளாக் அவற்றை கடற்படைத் தளபதி வைஸ்அட்மிரல் வசந்த கரணகொடவிடம் கையளித்தார்.

கடற்படையின் ரோந்துக் கண்காணிப்பு வசதிகளை வலுப்படுத்துவதற்காக அமெரிக்கா இந்த உபகரணங்களை வழங்கியுள்ளது.

அமெரிக்காவின் தேசியபாதுகாப்புச் சட்டத்தின் (1206இன்) கீழேயே இலங்கைக்கு இந்த நவீன இராணுவத் தளபாடங்கள் வழங்கப்படுகின்றன. பயங்கர வாதத்தைத் தடுப்பதறகான இராணுவ உபகரணங்களையும் மற்றும்பயிற்சிகளையும் நட்பு நாடுகளுக்கு வழங்குவதற்கு இந்தச்சட்டம் அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சுக்கு அதிகாரம் வழங்குகிறது.

அமெரிக்கா வழங்கும் இந்த் கடற் கண்காணிப்பு இராணுவஉபகரணங்கள் அமெரிக்கா வினால்1997ஆம் ஆண்டில் பயங்கரவாத அமைப்பாகப் பிரகடனம் செய்யப் பட்ட விடுதலைப் புலிகளின்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## மோதலில் காயமுற்ற படையினரை ரணில் நேற்றுப் பார்வையிட்டார்

கொழும்பு, நவ. 09

வடக்கில் நடைபெற்ற மோதல்களில் காயமடைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் படையினரை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று நேரில் சென்று பார்வையிட்டார்.

கடந்த சில நாள்களாக வடக்கில் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே இடம்பெற்றுவரும் மோதல்களில் காயமடைந்த படையினர் கொழும்பு

(08 ஆம் பக்கம் பார்க்க)

## கருணா அரசியல் தஞ்சம் கோரினால் பிரிட்டிஷ் அரசு ஏற்றுக்கொள்ளுமா?

### உள்துறை அமைச்சு விளக்கம்

லண்டன், நவ.9

லண்டனில் கைது செய்யப்பட்டுள்ள கருணாவுக்கு எதிராக போரியல் குற்றச் சாட்டுக்களின் கீழ் சட்ட நடவடிக்கையை எடுக்கச் செய்வதற்கான வாய்ப்புக்கள் குறித்து லண்டனைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் சர்வதேச மன்னிப்புச் சபை பிரிட்டிஷ் அரசைக் கோரி வருகின்ற நிலையில், கருணா போர்க்குற்றங்களில் ஈடுபட்டார் என ஆதாரம் கிடைத்தால் அது பற்றி விசாரிக்கப்படும் என்று பிரிட்டிஷ் உள்துறை அமைச்சு தெரிவித்திருக்கின்றது.

பிரிட்டிஷ் உள்துறை அமைச்சின் அதிகாரி ஒருவர் லண்டன் பி.பி.சிக்கு மின்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## அகதிகள் வருகை

இராமேஸ்வரம், நவ. 09

முல்லைத்தீவைச் சேர்ந்த ஈழத்தமிழ் அகதிகள் நால்வர் மன்னார் பேசாலை கடற் பரப்பிலிருந்து படகில் புறப்பட்டு நேற்றுமுன் தினம் தமிழகம் ஓலைக்குடா கடற்பகுதியை வந்தடைந்தனர்.

இராமேஸ்வரப் பொலிஸாரின் தீவிர விசாரணைகளுக்குப் பின்னர் அவர்கள் மண்டபம் முகாமில் தங்கவைக்கப்பட்டிருக்கின்றனர்.

## இராணுவத் தளபதி நேற்று குடாநாட்டுக்கு விஜயம்

யாழ்ப்பாணம், நவ. 09

இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா உள்ளிட்ட சிரேஷ்ட படை அதிகாரிகள் நேற்று யாழ். குடாநாட்டிற்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டனர்.

நேற்றுப் பகல் பலாலி சென்றடைந்த இராணுவத் தளபதி உள்ளிட்ட குழுவினரை யாழ். மாவட்ட கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் சந்திரசிறி வரவேற்றார்.

அதன் பின்னர் பலாலி கூட்டுப் படைத்தளத்தில் குடாநாட்டின் படை அதிகாரிகளுடன் இராணுவத் தளபதி சந்திப்பு ஒன்றை நடத்தினார். இதன்போது (08 ஆம் பக்கம் பார்க்க)

## 'சிரச' ஊடகவியலாளர் தாக்கப்பட்டனர்

கொழும்பு, ஒக். 9

திஸ்ஸமகராம, ரன்மினிதென்ன, கல்லாறுப் பகுதியில் இருவரின் சடலங்கள் மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பான விடயங்களைச் செய்தி சேகரித்து படம் பிடிக்கச் சென்ற 'சிரச' ஊடகவியலாளரும் படப் பிடிப்பாளரும் தாக்கப்பட்டு, அவர்களது உபகரணங்கள் சேதப்படுத்தப்பட்டன என்று கூறப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## உடன் தேவை

பாவனைக்குரிய பின்வரும் Printers உடன் தேவை

HP Laser Jet Printer for Printing - A4 size Papers
HP Laser Jet Printer for Printing - A3 size Papers

விற்பனை செய்ய விரும்புவோர் விவரங்களுடன் அலுவலக நேரங்களில் வரவும்.

ஆளணி முகாமையாளர், உதயன் பணிமனை, 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

**Uduvil Girls' College**
**Presents**
**NOVEMBER BLOSSOMS**

(A Production of English Plays and Recitation)
by
Students from Schools of the Jaffna District
on
*Saturday 10th November*, **2007, 10.00 a.m**
at
*The Uduvil Girls' College Hall*


## தீவகப் பகுதியில் நெற்செய்கை

நல்லூர், நவ. 8 நெடுந்தீவு, நயினாதீவு, புங்குடுதீவுப் பகுதிகளில் இம்முறை விவசாயிகள் நெற்செய்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இதற்கென புங்குடுதீவு கமநல சேவைகள் நிலையம் குறிப்பிட்ட பகுதிகளில் உள்ள நெல் உற்பத்தியாளர்களுக்கு மானிய அடிப்படையில் விதை நெல் மற்றும் உரம் ஆகியவற்றை விநியோகித்துள்ளது. (1-111)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 23 | 09 |
| 12 | 11 |
| 1955 | 2004 |




### அமரர் கந்தையா அரசரட்ணம்

எமக்காய் வியர்வை சிந்தி எமக்காய் பாடுபட்டு
எம்மைக் காத்த எம் இனிய சோதரனே!
சிட்டுக் குருவியாய் எம்மை விட்டு
நீ சென்ற நினைவுகள் இன்றும்
எம் மனதை விட்டு நீங்கவில்லை ஐயா!
உம் ஆத்மா சாந்திபெற வேண்டி நிற்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்.
அலுக்கை, அளவெட்டி கிழக்கு. (67746)

## 27ஆவது பிறந்த நாள் நினைவும் 65 ஆம் நாள் நினைவஞ்சலியும்



### அமரர் சுப்பிரமணியம் இதயராஜ்

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 09.11.1981 | 03.09.2007 |

உந்தன் நினைவுகளால் எந்தநாளும்
வெந்து நொந்து தவிக்கின்றோம்
எம்மை வந்து ஒருதரம் பார்க்காயோ

குடும்பத்தினர்.
68/2,இலந்தைக்குளம் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம். (சி/54311)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 17 | 11 |
| 08 | 10 |
| 1947 | 2007 |

### பிரான்சீஸ் லில்லி பிலோமினா

"தாம் முன்குறித்து வைத்தோரை அவர் அழைத்திருக்கிறார். தமக்கு ஏற்புடையோரைத் தம்மாட்சியில் பங்கு பெறச்செய்தார்"

*11.10.2007 அன்று இறைபதம் அடைந்த பிரான்சிஸ் லில்லி பிலோமினா அவர்களின் இறுதி வழிபாட்டில் கலந்து கொண்டு துயர் பகிர்ந்த அனைவருக்கும், பல வழிகளிலும் முன்னின்று உதவி புரிந்த புனித மடுத்தினார் குருமட அருட் தந்தையர்களுக்கும், கச்சாய் பங்கு நிர்வாக சபையினருக்கும் நன்றியைத் தெரிவிப்பதோடு, நாளை (10.11.2007) சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்தில் கலந்து கொண்டும், தவசிக்குளம் காணிக்கை மாதா ஆலயத்தில் மாலை 5 மணிக்கு நடைபெறும் திருப்பலியிலும் கலந்து கொண்டும், அன்னாரின் ஆத்ம சாந்திக்காகச் செபிக்குமாறும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்*

தகவல்: குடும்பத்தினர்.
*சேச்றோட், மிருசுவில்.* (67756)

## மரண அறிவித்தல்

### திருமதி நாகரெத்தினம் சுப்பிரமணியம்



கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் நல்லூர் கோவில் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகரெத்தினம் நேற்று(8.11.2007) காலமாகிவிட்டார்.


அன்னார் காலஞ்சென்ற கதிரேசு சுப்பிரமணியம் (பிரபல சோதிடர்) அவர்களின் அன்பு மனைவியும், பரமேஸ்வரி, காலஞ்சென்ற சிவமணி மற்றும் சண்முகநாதன் (டென்மார்க்) தனபாலசிங்கம்(நல்லைக்குமரன் றேடேர்ஸ்), யோகேஸ்வரி (யோகா சோதிடர்), சந்திரபுஸ்பராணி, சிவதர்சினி(U.K) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் (லிங்கம் அன் கொம்பனி), கணேசலிங்கம்(ராஜி ஸ்ரோர்ஸ்), சந்திரவதனா மற்றும் செல்வரட்ணம்(தங்கம் - டென்மார்க்), சூரியகுமாரன்(சுபா சென்ரர், கொக்குவில்), அருள்ராஜா(றோயல் ஸ்கொட்லன்ட் வங்கி, U.K) ஆகியோரின் மாமியாரும்

லிங்கேஸ்வரி (வாசுகி B.A. Australia),கலாநிதி மகேஸ்வரன்(Australia), தர்மசீலன்(MMG Newzeland),கலாநிதி நித்தியலக்ஷ்மி (New zeland), சண்முகசீலன்(லிங்கம் அன் கொம்பனி) ரஜினி(சுாதிய உத்தியோகத்தர்), தர்மேஸ்வரி (B.A.,கொழும்பு) சுதாகரன்(Soft ware Engineer, - Colombo), சத்தியசீலன்(Colombo) கலாநிதி ஜெயக்குமார்(Engineer, U.K),யசோதா(NHSS U.K),கலாநிதி ராஜ்குமார்(Engineer, U.K),ஞானமஞ்சரி(NHSS, U.K), சிவாஜினி(B.A, U.K),ரமணன்(U.K), Dr.இசைவாணி(டென்மார்க்), சோதிநாதன்(Engineer, U.K ),நல்லைக்குமரன்(டென்மார்க்), லக்ஷ்மி(டென்மார்க்),சுபநேமி(யாழ்/வேம்படி உயர்தர பாடசாலை), சுபராமி(யாழ். இந்து மகளிர் கல்லூரி), லக்ஷன், அஸ்வினி (U.K) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும்,

திவ்ஜன், சுபகா(Australia), சுவேதா, சுருதி, சுரபி, சுவாதி (Newzeland), பவப்பிரியன், யதுப்பிரியன், அவனிஷ்பிரியன்(Colombo)ஹஷ்டிகன், கார்த்திகன், ஹரிஷ்(U.K) ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.11.2007) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தனபாலசிங்கம்
(மகன் நல்லைக் குமரன் றேடேர்ஸ்),
இல.258/1 கோவில் வீதி நல்லூர்,
யாழ்ப்பாணம். தொ.பே. 2222442 (67757)




## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர்
தங்கராசா மோகனின்
அன்புச் சகோதரி
**திருமதி பவானி பிரபானந்தன்**
*(ஆசிரியை, அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயம்)*
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும்
அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக்
கொள்வதுடன் அன்னாரது
ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிச் சங்கம்,**
யா/ அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாசாலை, பருத்தித்துறை. (சி/54307)

## மரண அறிவித்தல்கள்

### சவரிமுத்து லொறற்ரோ

*(ஓய்வுபெற்ற மருத்துவதாதி)*



மாரீசன்கூடலைப் பிறப்பிடமாகவும் தற்போது ஜேர்மனியில் வசித்தவருமான சவரிமுத்து லொறற்ரோ 04.11.2007 ஞாயிறு அன்று ஜேர்மனியில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சவரிமுத்து - மரியமுத்து ஆகியோரின் அன்பு மகளும் பொ்ணதேத் (கிளி - ஓய்வுபெற்ற முன்னாள் உபஅதிபா், மாரீசன்கூடல் றோமன் கத்தோலிக்க பாடசாலை - கனடா), காலஞ்சென்ற எட்வேட் (துரைராசா- கணக்காளர்), கயித்தாம்பிள்ளை, அந்தோனிப்பிள்ளை, அந்தோனியாப்பிள்ளை (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், செபஸ்தியாம்பிள்ளை (பப்பா - கனடா) றோஸ்மேரி (பெரியபிள்ளை - பிரான்ஸ்), நாயகி, கயித்தாம்பிள்ளை, சின்னராசா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிப்பயண நல்லடக்கம் நாளை (10.11.2007) சனிக்கிழமை ஜேர்மனியில் நடைபெறும். அன்றையதினம் பி.ப. 3 மணிக்கு மாரீசன்கூடல் புனித கயித்தார் தேவாலயத்தில் காலஞ்சென்ற லொறற்ரோ அவர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காகத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: செ.அல்பிரட் (நேசராசா - சகோதரன்).
*மாரீசன் கூடல், இளவாலை.* (67755)

### தம்பையா பாலசிங்கம்



ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா பாலசிங்கம் அவர்கள் 08.11.2007 அன்று காலமானார்.

அன்னார் அம்பிகாதேவியின் அன்புக் கணவரும் ஸ்ரீபாஸ்கரன், ஸ்ரீபாஸ்கரி, நந்தகோபன், நந்தரூபி, அனுசா ஆகியோரின் அன்புத் தந்தையும் உதயதாரகை, குணராசா, யசோதா, தேவானந்தன் ஆகியோரின் மாமனும் அகல்யன், நிதர்சன், தர்மிலன், பானுசன், சர்வின், சாருஜா, நிஷாந்தி, கிருபாணந், தசாநந்தி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.11.2007) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஏழாலை உசத்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
*ஏழாலை மேற்கு, ஏழாலை.* (சி/54310)

### சபாபதிப்பிள்ளை ஜெகதீசன்

**(Rtd.Assistant Accountant, Ceylon Tobacco Company)**



543,மானிப்பாய்வீதி,வண்ணார் பண்ணை. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் 18, 4/2, Perera Lane, Colombo-06 இல்லத்தை வதிவிடமாகவும் கொண்டிருந்த சபாபதிப்பிள்ளை ஜெகதீசன் 08.11.2007 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சபாபதிப்பிள்ளை - சுகிர்தமலர் தம்பதியரின் அன்பு மகனும் சத்தியபாமாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற டாக்டர் வே.பொன்னையா-சிவகாமிப்பிள்ளையின் அன்பு மருமகனும் சியாமளா (கொழும்பு), மயூரன் (Medical Promotional Executive- Astra Zeneca), சசிகலா (USA), கல்பனா (Teacher - Ikra International School) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஞானசீலன் (Maruthi Property Developers, Colombo) தர்சினி (Divisional Secretary Office - Colombo), குமரசேகரன் (Engineer - USA), சுதாகரன் (SLIIT/UK) ஆகியோரின் அன்பு மாமனாரும் சோதிகன், மதன்ராஜ், காஜப்பிரியா, சைல லீலா, திவ்வியமலர்,பிரவீணா ஆகியோரின் பேரனும் சுந்தரேஸ்வரி (Rtd. Teacher, Colombo), காலஞ்சென்ற விமலாதேவி (Canada), சுசிலாதேவி (மலேசியா), சகுந்தலா (கனடா), பத்மராணி (ஜேர்மனி), ருக்மணி (USA), மாலினி (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை கல்கிஸை, மஹிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு, நாளை சனிக்கிழமை காலை 8 மணி முதல் இறுதிக்கிரியைகள் நடைபெற்று மு.ப. 10 மணிக்கு கல்கிஸை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல் :-
**மயூரன்** *(மகன்)*
தொலைபேசி:- *011-4900091,077 3690471*
**18, 4/2 பெரேரா ஒழுங்கை, கொழும்பு -06.**
(சி/54309)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தீவுப்பகுதி மக்களின் போக்குவரத்தை இலகுவாக்க வேலணையில் 'டிப்போ' ஒன்றை அமைக்குக

## பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை கருத்து

நல்லூர்,நவ.9

நெடுந்தீவு, நயினாதீவு, புங்குடுதீவு, வேலணை பகுதிகளில் உள்ள மக்களின் போக்குவரத்து வசதிகளைச் சீர்செய்யக்கூடியதாக மீண்டும் வேலணையில் இ.போ.ச. பஸ் டிப்போ ஒன்றை அமைக்குமாறு வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை கருத்துத் தெரிவித்துள்ளார்.

வேலணைப் பகுதி தீவுப்பகுதியின் முக்கிய பிரதேசமாக இருப்பதால் தீவக மக்களின் நலன் கருதி வேலணையை ஒரு நகரமாக மாற்றுவதற்கான செயற்பாடுகளை முன்னெடுக்க உரியவர்கள் முன்வர வேண்டும்.

அத்துடன் இப்பிரதேசத்தில் இடம்பெயர்ந்துள்ள மக்கள் மீளக்குடியமர்வதற்கு ஏற்ப வசதியான வீடுகளை அமைத்துக் கொடுக்கவும் உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தற்போது சிறிய அளவிலான வீடுகளை அமைத்துக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இதற்குப் பதிலாக தரமான வீடுகளை அமைத்துக் கொடுக்க உரியவர்கள் முன்வரவேண்டும் என்று அவர் மேலும் கேட்டுள்ளார்.

வேலணை பிரதேச சபையின் திறப்பு விழா நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதில்கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார். (203-111)

# கமநலக் காப்புறுதிச் சபையால் புலமைப்பரிசில் தரம் 5 மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ளது

யாழ்ப்பாணம்,நவ.9

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையால் 2006 ஆம் ஆண்டில் தரம் 5 புலமைப் பரிசில் பரிட்சையில் சித்திபெற்ற மாணவர்களுக்குப் புலமைப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

இந்தப் புலமைப்பரிசிலுக்கு யாழ். மாவட்டத்தில் கமக்கார ஓய்வூதியத் திட்டத்தில், நெற்பயிர்ச் செய்கைக் காப்புறுதித் திட்டத்தில் அல்லது பண்ணை விலங்கு காப்புறுதித் திட்டத்தில் இணைந்து கொண்ட உறுப்பினர்களின் பிள்ளைகள் விண்ணப்பிக்க முடியும்.

கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்தில் சேர்ந்த அங்கத்தவர் ஒருவரின் பிள்ளையாயின் 2006.08.11ஆம் திகதிக்கு முன்னர் ஆகக் குறைந்தது 3 வருட காலம் அதாவது 6 போக காலத்துள் சகல தவணைப் பணமும் உரியவாறு நிலுவையின்றிச் செலுத்தப்பட்டு செல்லுபடியாக உறுப்புரிமை பெற்றிருத்தல் வேண்டும்.

நெற்பயிர்ச்செய்கை காப்புறுதித் திட்டத்தின் அங்கத்தவர் ஒருவரின் பிள்ளையாயின் 2006.08.11 ஆம் திகதிக்கு முன்னர் ஆகக்குறைந்தது 2 போகங்களுக்குத் தொடர்ச்சியாகக் காப்புறுதி செய்யப்படிருத்தல் வேண்டும்.

பண்ணை விலங்குக் காப்புறுதித் திட்டத்தினைச் சேர்ந்த ஒருவரின் பிள்ளையாயின் 2006.08.11 ஆம் திகதிக்கு முன்னர் செல்லுபடியான உறுப்புரிமையைப் பெற்றிருத்தல் வேண்டும்.

தகுதியானவர்களை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் யாழ் மாவட்டக் காரியாலயத்தில் விண்ணப்பங்களை ஒப்படைக்க வேண்டும் என்றும் விண் ணப்பப்படிவத்தினை மாவட்டக் காரி யாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம் எனவும் கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச்சபை உதவிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (203-86)

## குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,நவ.9

வடமராட்சி கல்வி வலயத்தில் தரம் - 7 வகுப்பில் தமிழ் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான புதிய கலைத்திட்ட மாற்றச் செயலமர்வுகள் நாளை சனிக்கிழமை காலை 8 மணிக்கு வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

அத்துடன் தரம் 11 இல் தமிழ்ப்பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு இச்செயலமர்வுகள் இதே பாடசாலையில்இடம்பெறவுள்ளன. (203)

* * *

யாழ்ப்பாணம்,நவ.9

திருநெல்வேலி வட்ட லயன்ஸ் கழகத்தின் கல்விசார் சேவைத்திட்டம் நாளை சனிக்கிழமை பி.ப 2 மணிக்கு யாழ்.இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

சேவைத்திட்டத் தலைவர் லயன் கலாநிதி க.குணராசா தலைமையில் இடம்பெறும் மேற்படி நிகழ்விற்கு யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

நிகழ்வில் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் முதல் ஆறு இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கு விருது களும் பரிசில்களும் வழங்கிக் கெளரவிக்கப்படவுள்ளதுடன், கல்விச் சேவைக்காக அர்ப்பணித்த ஜோண்பொஸ்கோ, யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை, கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்களும் கெளரவிக்கப்படவுள்ளனர். (203-95)

* * *

நல்லூர்,நவ.9

தீவகப் பகுதியில் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு இன்றும் நாளையும் சுகாதார கண்காட்சி ஒன்றை நடத்தவுள்ளது.

வேலணை சரஸ்வதி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ள இக்கண்காட்சியை யாழ். சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தம்பதியினர் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு திறந்து வைக்கவுள்ளனர்.

கண்காட்சியில் சுகாதாரம் மற்றும் ஆரோக்கியம் தொடர்பான பல்வேறு விடயங்கள் காட்சிப்படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (203-111)

* * *

நல்லூர் சென்.பெனடிக்ற் றோ.க.த.க.பாடசாலையின் குருளைச் சாரணர் சின்னம் சூட்டும் விழா இன்று வெள்ளிக்கிழமை பி.ப.1.30 மணிக்கு அதிபர் அருட்சகோதரி மரியமலர் யோசப் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் விருந்தினராக உதவி மாவட்ட ஆணையாளரும் (குருளை சாரணர் பிரிவு,கிளிநொச்சி) பயிற்றுநர் தலைவரும், தேசிய பயிற்றுனர் அங்கத்தவருமாகிய திருமதி ஆர்.ஜே.சேவியர் கலந்துகொள்வார். (203)

* * *

குடத்தனை,நவ.9


வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் வடக்கு வீதியில் அமைந்துள்ள பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்றுவரும் வாராந்த நிகழ்வில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை ''திருவருட்பயன்'' என்னும் தலைப்பில் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.

இந்தச் சொற்பொழிவினை பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலை இரத்த பரிசோதகர் சண்முகம் தேவன் நிகழ்த்துவார். (203-78)

* * *

வலி.தென்மேற்கு,நவ.9

யுனிசெவ் நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ்.செயலக மிதிவெடி செயற்பாட்டு அலுவலகத்தின் ஏற்பாட்டில் சர்வோதய நிறுவனம் நடத்தும் மிதிவெடி விழிப்புணர்வு கல்வி ஊட்டல் பயிற்சி வகுப்பு நாளை சனிக்கிழமை தொடக்கம் மூன்று தினங்களுக்கு பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவு சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (203-135)



கரவெட்டி பிரதேச செயலகமும் வடமராட்சி லயன்ஸ் கழகமும் பிரதி மாகாண சுகாதாரப் பணிமனையும் இணைந்து நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் அண்மையில் நட்மாடும் இலவச மருத்துவ முகாமையும் இரத்த தானத்தையும் நடத்தின. கண்பார்வை குறைந்த ஒருவர் பரிசோதனை செய்யப்படுவதையும் இரத்ததானம் வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம். *(படங்கள் : சுந்தா)*

## நிக்கொட் II திட்டத்தின் கீழ்

# 31 மில்லியன் ரூபா செலவில் குடாநாட்டில் 13 வீதிகள் புனரமைப்பு

யாழ்ப்பாணம்,நவ.9

யாழ்.மாவட்டத்திலுள்ள 13 வீதிகள் நிகொட் - II திட்டத்தின் கீழ் மீள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன. இதற்கென 31.77 மில்லியன் ரூபா செலவிடப்படவுள்ளது.

மாவட்டத்திலுள்ள 8 பிரதேச செயலர் பிரிவுகளில் இவ்வீதிப் புனரமைப்பு மேற்கொள்ளப்படவுள்ளது. புனரமைப்புச் செய்யப்படவுள்ள வீதிகள் விவரம் வருமாறு:

- நெடுந்தீவு - சாரப்பிட்டி வீதி, சென் லோறன்ஸ் வீதி, தொட்டாச்சியார் வீதி, மாவிலி பெரியதுறை வீதி.
- ஊர்காவற்றுறை - செபஸ்தியன், கண்ணகி அம்மன் வீதி.
- வேலணை - சுருவில் வேலணை மீன்பிடி வீதி.
- கோப்பாய் - மகிழடி விநாயகர் வீதி
- சங்கானை - கலைவேம்படி வீதி
- தெல்லிப்பழை - மல்லாகம் தெற்கு கொலனி வீதி, கட்டுவன்புலம் பாடசாலை ஒழுங்கை.
- பருத்தித்துறை - கற்கோவளம் வீதி
- நல்லூர் - கச்சேரி கிழக்கு உபாய ஒழுங்கை, பெந்துகோஸ்து (பகுதி) ஒழுங்கை

இதேவேளை -


தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் உள்ள அருணோதயா கல்லூரிக்கு 10 மில்லியன் ரூபா செலவில் இருமாடி வகுப்பறைக் கட்டடம் நிகொட் II திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்டு கட்டடம் பாடசாலை நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (202-95)

# கல்வயல் விவசாயிகளுக்கு உரம் விநியோகம்

யாழ்ப்பாணம்,நவ.9

கல்வயல் பிரதேச நெற்செய்கையாளருக்கு இன்று வெள்ளிக்கிழமை மீசாலை கமநல சேவை நிலையத்தில் வைத்து ரி.டி.எம். உரம் வழங்கப்படவுள்ளது என்று கல்வயல் விவசாய சம்மேளனத் தலைவர் கா.வேதநாயகம் தெரிவித்துள்ளார். (203-207)

# கரையாத கற்பனைகள்; சவர்க்கார சிற்பக் கண்காட்சி



யாழ்ப்பாணம்,நவ.9

'கரையாத கற்பனைகள்' சவர்க்கார சிற்பக் கண்காட்சி இன்று வெள்ளிக்கிழமை வட்டுக்கோட்டை வைரவிழா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஆசிரியர் ம.பார்த்திபனின் கைவண்ணத்தில் சவர்க்காரத்தில் உருவாக்கப்பட்ட சமகால நிகழ்வுகளைச் சித்திரிக்கும் இருநூறுக்கும் அதிகமான சிற்பங்கள் கண்காட்சியில் இடம்பெறுகின்றன.

இன்று தொடக்கம் ஞாயிற்றுக்கிழமை வரை மூன்று தினங்கள் கண்காட்சி நடைபெறவுள்ளது.

சமகால நிகழ்வுகளைச் சித்திரிக்கும் வகையில் பல்வேறு வடிவங்களில் சவர்க்காரத்தில் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. (203-111)

# திருக்குடும்பக் கன்னியர் மட பரிசளிப்பு விழா

குருநகர்,நவ.9

யாழ். திருக்குடும்பக் கன்னியர் மட பாடசாலையின் பரிசளிப்பு நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக பட்டதாரி கற்கைநெறியின் பீடாதிபதி பேராசிரியர் கதிர்காமநாதன் கந்தசாமி மற்றும் சாவகச்சேரி இந்து ஆரம்பப் படசாலை அதிபர் திருமதி சியாமளா கந்தசாமி ஆகியோர் பிரதம விருந்தினர்களாகவும் யாழ். பல்கலைக்கழக ஊடக பயிற்சி நிலைய விரிவுரையாளர் வணபிதா றூபன் மரியாம்பிள்ளை அடிகளார் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள்வர். (203-51)

# கைதடியில் மானிய உரவிநியோகம்; பெரும்பாக அதிகாரி விளக்கம்

யாழ்ப்பாணம்,நவ.9

'உர விநியோகத்தில் மோசடி' என்ற தலைப்பில் இம்மாதம் 2ஆம் திகதி உதயன் 7ஆம் பக்கத்தில் வெளியாகியிருந்த செய்தி தவறானதென கைதடி கமநல சேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் வை. பாலகிருஷ்ணன் அறிவித்துள்ளார்.

ஒவ்வொரு கமக்கார அமைப்புக்களின் சிபார்சுடன் [illegible] மீள் பரிசீலனை செய்யப்பட்டு அதன்பிரகாரம் அவர்களுக்கு உரிய அளவுகளில் மானிய உர விநியோகம் செய்து வருகின்றோமே தவிர, மேலதிகமாக ஓர் அவுன்ஸ் கூட விநியோ கம் செய்யப்படவில்லையென்று அவர் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டிருக் கின்றார்.

தனங்களப்புப் பகுதி உயர்பாதுகாப்பு வலயத்தில் இருக்கும் பிரதேசமாகையால் அதற்கு உரமானிய விநியோகம் ஆரம்பிக்கப்பட்ட [illegible] ஆம் ஆண்டில் இருந்து இன்றுவரை விநியோகம் மேற்கொள்ளப்படவில்லை என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

# ஆண்டிறுதிப் பரீட்சைகள் பொதுப் பரீட்சையாக இடம்பெறும்

அச்சுவேலி,நவ.9

ஆண்டிறுதித் தவணைப் பரீட்சைகள் வலய மட்டத்தில் பொதுப்பரீட்சையாக நடத்தப்படவுள்ளது.

யாழ்.வலயத்தில் தரம் 11 மாணவர்களுக்கான முன்னோடிப் பரீட்சைகள் இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாவுள்ளன.

ஏனைய வகுப்பினருக்கான பரீட்சைகள் எதிர்வரும் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ளன. தரம் 9 மாணவர்களுக்கான பரீட்சைகள் பொதுப்பரீட்சையாக நடத்தப்படவுள்ளன.

இவர்களுக்கான பரீட்சை வினாத்தாள்கள் திருகோணமலையில் இருந்து கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டுள்ளதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (203-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

பலாலி வீதி, புண்ணாலைக்கட்டுவன் வடக்கு சந்திக்கு அருகில் உரித்துரிமையுள்ள 5 பரப்புக் காணியும் 100 மீற்றர் தொலைவில் 10 பரப்புக் காணியும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : லட்சுமி ஸ்ரோர்ஸ்,
ஆடியபாதம் வீதி, நல்லூர்
தொ.பே. 0779912380.
(67754)


## வலுவிழந்தோருக்குப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,நவ.9

வலுவிழந்தோர் தினத்தை முன்னிட்டு வலுவிழந்த மாணவர்களின் திறமைகளை மேம்படுத்தும் நோக்கில் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையில் பல்வேறு போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

போட்டிகளுக்கு விண்ணப்பித்த மாணவர்களில் வலுவிழந்த மாணவர்களை மட்டும் அழைத்து வருமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (203)


## சர்வதேச லயன்ஸ் கழகங்கள்

மாவட்டம்: 306B1 - இலங்கை
வடபிராந்தியம்

**திருநெல்வேலி வட்ட லயன்ஸ் கழகம்**

நடத்தும்

**கல்விசார் சேவைத்திட்டம்**

யாழ்.மாவட்டத்தில் 2007ஆம் ஆண்டு
தரம்5 புலமைப் பரிசில் பரீட்சையில் முதல்நிலை பெறுபேறுகளைப்
பெற்ற மாணவர்களையும் முதல்நிலை
பெறுபேறுகளை ஈட்டிய பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்களையும்

**கௌரவித்து ஊக்குவிக்கும் பாராட்டு வைபவம்**

காலம்: நாளை (10.11.2007) சனிக்கிழமை பி.ப. 2மணி
இடம்: யாழ்.இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபம்

*பிரதம விருந்தினர்:*
**பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை**
*(முன்னாள் துணைவேந்தர், யாழ்.பல்கலைக்கழகம்)*

*கௌரவ விருந்தினர்கள்:*
**லயன் வி.ரி.செல்வரத்தினம்,**
*(மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளரும் வலயக் கல்விப்பணிப்பாளரும்)*
**லயன் எஸ்.எஸ்.தங்கராஜா**
*(மாவட்ட இணைப்பாளர் - வடக்கு மாவட்டம் 306B1 சர்வதேச லயன்ஸ் கழகங்கள்)*
**லயன் கே.தேவராசா**
(பீடாதிபதி - முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம், யாழ்.பல்கலைக்கழகம்)
**பேராசிரியர் எஸ்.கிருஷ்ணராஜா**
*(பீடாதிபதி - கலைப்பீடம் யாழ்.பல்கலைக்கழகம்)*

*சிறப்பு விருந்தினர்:*
**லயன் P.கமலநாதன்**
*(மாவட்டத் தலைவர் - கல்வி மாவட்டம் 306B1, சர்வதேச லயன்ஸ் கழகங்கள்)*

சமூகப் பெரியார்களையும் கல்விசார் பிரமுகர்களையும்
லயன்ஸ் கழக உறுப்பினர்களையும் பங்குபற்றி இவ்வைபவத்தை
சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

லயன் கலாநிதி K.துரைராசா, சேவைத்திட்டத் தலைவர். (67711) லயன் எஸ்.தனபாலசிங்கம், கழகத் தலைவர்.



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**உயர்திரு. வி.எஸ்.சித்திரவடிவேல்**
**(B.A., Hons Dip. in Edu., S.L.P.S. - I)**

அறிவில் உயர்ந்து
ஆற்றலில் சிறந்து
அனுபவத்தில் முதிர்ந்து - பதவியுயரும்
எங்கள் அதிபரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
எமது பாடசாலையில் கடந்த பதினொரு (11) வருடங்களாக
அதிபராக சேவையாற்றி கோப்பாய் கல்விக் கோட்டக்
கல்வி அதிகாரியாக 01.11.2007 அன்று பதவி உயர்வு
பெற்றுச் சென்ற எங்கள் அதிபரின் கல்விப்பணி மேலும் தொடர
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதி அதிபர், ஆசிரியர்கள்,
கல்விசாரா ஊழியர்கள்,
மாணவர்கள்.

யா/இடைக்காடு மகாவித்தியாலயம்,
அச்சுவேலி.
(சி/54302)



# 24 ஆவது பிறந்தநாள் வாழ்த்தும் 8 ஆம் மாத நினைவஞ்சலியும்

மலர்வு: 09.11.1983 உதிர்வு: 16.03.2007



அன்பாலே அரவணைத்து அறிவோடும்
பண்போடும் எமக்கு வழிகாட்டிய செல்லாவே!
என்னைத் தாய் என்று உலகிற்கு வெளிக்காட்ட
கடைக்குட்டியாய் வந்துதிதாயே செல்லாவே!
உன்னைக் கையில் தூக்கிய தந்தையின்
மகிழ்விற்கு ஈடு இணை ஏது செல்லாவே!
எங்களை விட்டு எங்கு சென்றாயோ?
உன்னுடைய சகோதரிகளை நினைத்தாயோ செல்லாவே!
மாதங்கள் எட்டு ஓடி மறைந்தாலும்
எம் இதயங்களில் குடியிருக்கும் அன்புச் செல்லாவே!
உன்னுடைய நினைவுகள் என்றும் எம்மை
விட்டுப் பிரியாது செல்லாவே!

*ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!*

மா.முருகேசு,
57/1, பழைய பூங்கா வீதி,
கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்,
பெரியப்பா-பெரியம்மா குடும்பம் (கண்டி),
சித்தப்பா-சித்தி குடும்பம் (இந்தியா),
அன்ரி-அங்கிள் குடும்பம்,
மாமா-மாமி குடும்பம் (கனடா).

(சி/54214)

# செல்வி முருகேசு குணேஸ்வரி (செல்லா)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அ'புர விமானத்தளத் தாக்குதலில் 24 விமானங்கள் சேதமடைந்தன

## உண்மையை உடைக்கிறார் சரத் ரணவக்க எம்.பி.

கொழும்பு, நவ.9

''அநுராதபுர விமானப்படைத்தளம் மீதான தாக்குதலின்போது மொத்தமாக 24 விமானங்கள் சேதமடைந்தன. அவற்றுள் 10 விமானங்கள் முற்றாக அழிந்து நாசமாகின, 14 விமானங்கள் பகுதியளவிலும் சேதமாகியுள்ளன.''

- இவ்வாறு ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் ரணவக்க நேற்று நாடாளுமன்றில் கூறினார்.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அவசரகாலச்சட்ட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

அநுராதபுரத் தாக்குதலில் எத்தனை விமானங்கள் சேதமாகின என்ற சரியான விவரங்களை அரசு இந்த நாட்டு மக்களுக்கும், நாடாளுமன்றிற்கும் தெரியப்படுத்த மறுத்துவிட்டது.

மாறாகப் பொய்யான தகவல்களையே அரசு வழங்கியது. உண்மையில் இத் தாக்குதலால் மொத்தம் 24 விமானங்கள் சேதமாகின. 10 விமானங்கள் முற்றாக அழிந்து சாம்பலாகின. 14 விமானங்கள் பகுதியளவில் சேதமாகின. பகுதியளவில் சேதமான விமானங்கள் சிலவே திருத்தப்பட முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மொத்தம் 27 விமானங்கள் அந்த விமானத்தளத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தன. அவற்றுள் 03 விமானங்கள் ஓர் ஓரத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தமை யால் அம்மூன்றும் தப்பின.

சேதமான விமானங்களுள் ஐ.தே.கட்சி ஆட்சிக்காலத்தில் கொள்வனவு செய்யப்பட்ட விமானங்களும் இந்த அரசால் இஸ்ரேலிடமிருந்து பெறப்பட்ட விமானங்களும் இருந்தன.

இந்தத் தகவலை நாட்டு மக்களுக்குத் தெரிவிக்காமல் மூடிமறைத்த அரசு தமிழ்ச்செல்வனின் மரணத்தின்மீது இப்போது அரசியல் நடத்துகின்றது. தமிழ்ச்செல்வனைச் கொன்றொழித்துவிட்டோம் என்று தம்பட்டம் அடிக்கின்றது.

புலிகளின் புலனாய்வுத்துறைத் தகவலின்படியே தமிழ்ச்செல்வன் கொல்லப்பட்டார் என்று அரசு தெரிவித்தது. அப்படியாயின் பிரபாகரன்தான் திட்ட மிட்டு தமிழ்ச்செல்வனைக் கொலை செய் திருப்பார். தனனுடன் கூடவே இருந்த கிட்டுவைக்கூட கொன்றவர் பிரபாகரன். ஆனால், அரசோ தாமே செல்வனைக் கொன்றோம் எனக் கூறி மக்கள் மத்தியில் அரசியல் நடத்தமுனைகின்றது.

தமிழ்ச்செல்வனின் கொலை மூலம் புலிகள் சர்வதேச மட்டத்தில் நல்ல பலன்களைப் பெற்றுவருகின்றனர் - என்றார். (சி)

# போருக்கு எதிரான முன்னணியின் தேசிய மாநாடு

கொழும்பு,நவ.9

போருக்கு எதிரான தேசிய முன்னணி அதன் தேசிய மாநாட்டை நாளை 10ஆம் திகதி கொழும்பு சுகததாஸ உள்ளக அரங்கில் நடத்துகின்றது.

நாளை பி.ப. 1 மணியிலிருந்து மாலை 6 மணிவரை நடைபெறவிருக்கும் இம் மாநாட்டில் மக்கள் கோரிக்கை என்ற தலைப்பில் ஆவணம் ஒன்று உறுப்பின் அங்கீகாரத்துக்காக முன்வைக்கப்படும். உறுப்பினர்கள் மத்திலிருந்து புதிய தலைமைக் குழு வொன்றும் தெரிவு செய்யப்படும்.

# அநுராதபுரம் தாக்குதலில் 10 வான்கலங்கள் அழிந்தன

## 16 சேதமென்றும் நீதிமன்றில் அறிக்கை

கொழும்பு, நவ.9

அநுராதபுரம் விமானத்தளம் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் பத்து வான்கலங்கள் முற்றாக அழிந்தன. 16 வான் கலங்கள் சேதமடைந்தன.

அநுராதபுரம் பொலிஸார் நேற்றுமுன்தினம் நீதிமன்றத்தில் சமர்ப்பித்த அறிக்கையில் இத்தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

மாவட்ட நீதிபதி வசந்த ஜினதாஸ முன் பொலிஸார் சேதவிவரம் தொடர்பாக சமர்ப்பித்த் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அப்பகுதியில் உள்ள வீடுகள் மற்றும் தளத்தின் கட்டடங்களும் சேதமடைந்தன.

வான்படைத்தளத்தில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் போது 164 வெடிக்காத குண்டுகள் செயலிழக்கச் செய்யப்பட்டன என்றுள்ளது.

இந்நிலையில் அநுராதபுரம் மோதலின் போது சிறிலங்கா வான்படையினர் பயன்படுத்திய ஆயுதங்கள், வெடிமருந்துகளின் அளவுகளைத் தாக்கல் செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

(அ-1)

# கந்தசஷ்டி பூசைத் திருவிழாக்கள்

யாழ்ப்பாணம்,நவ.9

கந்தசஷ்டித் திருவிழாக்கள் நாளை சனிக்கிழமை விசேடமாக முருகன் ஆலயங்களில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளன.

நீர்வேலி கந்தசுவாமி ஆலயத்தில் முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் பூசைகள் ஆரம்பமாகி எதிர்வரும் 17ஆம் திகதி திருக்கல்யாணத்துடன் நிறைவடையவுள்ளது.

15ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு வேல் வழங்கும் காட்சியும் பிற்பகல் ஒரு மணிக்கு சூரசங்காரமும் இடம்பெறும். மறு நாள் காலை தீர்த்தத் திருவிழா இடம்பெறும். (203-224)

* * *

நீர்வேலி செல்லக்கதிர்காம சுவாமி ஆலயத்தில் இன்று சனிக்கிழமை பூசைகள் ஆரம்பமாகி நடைபெறவுள்ளன. எதிர்வரும் 15ஆம் திகதி வியாழக்கிழமை சூர சங்காரமும் மறுநாள் திருக்கல்யாணமும் இடம்பெறும். (203)

* * *

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் காலை 8.30 மணிக்கு முருகப்பெருமா னுக்கு சண்முகாஅர்ச்சனையும் மாலை 4 மணிக்கு கந்தசஷ்டி பூசையும் இடம்பெறும். (203)

* * *

சரவணை பள்ளம்புலம் முருகமூர்த்தி ஆலயத்தில் காலை 9 மணிக்கு பூசை ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 15ஆம் திகதி சூர சங்காரமம் மறுநாள் திருக்கல்யாணமும் இடம்பெறும்.

* * *

சாவகசேரி துர்க்காதேவி ஆலயத்தில் தினமும் பிற்பகல் 2 மணிக்கு பூசைகள் இடம்பெறும். 15ஆம் திகதி சூரன்போரும் மறுநாள் திருக்கல்யாணமும் இடம் பெறும். (203)



காரைநகர் பயிரிக்கூடல் சிவசுப்பிரமணிய சுவாமி கோயிலில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட இராஜகோபுரத்திற்கான மகாகும்பாபிஷேகம் அண்மையில் இடம்பெற்றபோது இராஜகோபுரத்திற்கு கும்பாபிஷேகம் இடம்பெறுவதையும் படத்தில் காணலாம். (250)

# குருப்பெயர்ச்சி உங்களுக்கு எப்படி...?

*(15.11.2007 முதல் 29.11.2008 வரை)* - சோதிடர் கிருஷ்ணா.

## மிதுனம்

மிருகசீரிடம் 2,3, திருவாதிரை 1-4, புனர்பூசம் 1,2,3

ஏழரைச் சனி உங்களை விட்டு விலகுகின்றது. குருபகவான் பார்வை அவர் மேல் விழுவதால் சகோதரர்களால் நன்மை. நண்பர்கள் உதவி உங்களுக்கு துணையிருக்கும். ராசியில் நீண்ட நாள் இருக்கும் செவ்வாய் குரு பார்வை பெறுவதால் உங்கள் முயற்சி வெற்றி பெறும். தன்னம்பிக்கை வளரும். உடல் நலம் தேறும். கணவன், மனைவி உறவு இன்பமாக இருக்கும். சிலருக்கு திருமணங்கள் கைகூடும். நீண்ட நாள் தடைப்பட்ட திருமணங்கள் நடக்கும். மாணவ மாணவிகளுக்கு விளையாட்டில் பரிசுகள் கிடைக்கும். சிலருக்கு வேலைவாய்ப்புக்கள் வெளிநாட்டுப் பயணங்கள் கைகூடும். சிலருக்கு பதவி உயர்வு பதவி மாற்றம் கிடைக்கும். செய்தொழிலில் ஆதாயம் கூடும். தொழிலாளர்கள். ஒத்துழைப்பார்கள். அவர்கள் நலம்கூடும். பிள்ளைகளின் கல்வி மேன்மையடையும். சிலருக்கு தெய்வ தல தரிசனம், பெரியோர்கள தரிசனம் கிடைக்கும் தகப்பனார் வழிசெலவுகள் குறையும். அவர்கள் தேக நலம் நன்றாகும். குருவின் பார்வை லாபத்தில் விழுவதால் லாபம் கூடும். மூத்த சகோதர, சகோதரிகளின் கருணை கிடைக்கும் அவர்களால் நன்மையுண்டு. தொழிலில் இருந்த போட்டிகள் குறையும்.சிலருக்கு வீடு, நிலம் வாங்க யோகம் உண்டு. படிப்பு சம்பந்தமாக இருந்த தடைகள் நீங்கும். மருத்துவ செலவு குறையும். அரசு நன்மைகள் உத்தியோகத்தில் திடீர் உயர்வு சிலருக்கு கிடைக்கும். அதிர்ஷ்டமான திகதிகள் 4,9, 13,18,22,27.

**பெண்களுக்கு:-** இந்த குருப்பெயர்ச்சியில் உங்களுக்கு மிகவும் விசேஷமாகும். குரு பகவான் உங்கள் ராசிக்கு 7ஆம் இடத்திற்கு வந்திருப்பதால் குரு பலவானாய் விளங்குவதால் தடைப்பட்டு வந்த சுபகாரியங்கள் மங்களகரமாக நிறைவேறும். உடல் நிலை மிகவும் நன்றாக இருக்கும். களத்திர ஸ்தானத்திற்கு வந்திருக்கும் குரு பகவான் அங்கிருந்து ஜென்ம ராசியையும், உங்கள் 11ஆம் இடத்தையும் 3ஆம் இடத்தையும் பார்வையிடுவது மிகவும் சிறப்பாகும். பிரச்சினைகள் சிக்கல்கள் எல்லாம் விலகி ஓடும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு பதவி உயர்வு, சம்பள உயர்வு கிடைக்கும். இந்தக் குருப்பெயர்ச்சியால் நினைத்த காரியங்கள் எல்லாம் நிறைவேறும். ஒரு சில பெண்களுக்கு பூர்வீக சொத்துக்கள் வந்து சேரும் வாய்ப்புக்கள் வரும். சொந்த வீடு, வாகனம், தோட்டங்கள் வாங்கிப் போடும் வாய்ப்பு கைகூடும். கணவன், மனைவி உறவு நன்றாக இருக்கும். சில பெண்கள் சொந்தமாக தொழில் செய்யும் வாய்ப்பு வரும். குடும்பத்தில் சண்டை சச்சரவுகள் மாறி மகிழ்ச்சியாக இருக்கும். மாமியார், மருமகள் உறவு சுமூகமாக இருக்கும். இந்த குருபலத்தால் புதிய ஆடை ஆபரணச் சேர்க்கைகள் வந்து சேரும். உடன் பிறந்தவர்களால் உதவி கிடைக்கும். சில பெண்களுக்கு பிள்ளைகளால் உதவி கிடைக்கும். உங்கள் வசதி வாய்ப்புக்கள் அதிகரிக்கும். மனக்குழப் பங்கள் மாறிப்போகும். 10.05.2008 முதல் 07.09.2008 வரை எல்லாக் காரியங்களும் மந்தமாக இருக்கும். மனக் கஷ்டங்கள் குரு வழிபாடு அவசியம். 08.09.2008 முதல் குருவக்ர நிவர்த்தி பெற்று மீண்டும் நல்ல வாய்ப்புகளை பெற்றுத்தருவார். இந்த குரு பெயர்ச்சி உங்களுக்கு மிகவும் சிறப்பாகும்.

**மாணவர்களுக்கு:-** இந்த குருப்பெயர்ச்சி உங்களுக்கு மிகவும் சிறப்பாகும். படிப்பு சிறப்பாக இருக்கும். நீங்கள் நினைத்தபடி மேல் படிப்புகளைத் தொடரும் வாய்ப்புகள் வரும். மந்தமாக இருந்த நீங்கள் கெட்டிக்காரர்களாக மாறும் வாய்ப்பு வரும். முயற்சித்தால் முதல்மாணவர்களாக வருவீர்கள். சில மாணவர்களுக்கு வெளியூர் அல்லது வெளிநாடு சென்று படிப்பதற்கான வாய்ப்புக்கள் வரலாம் மொத்தத்தில் மிகவும் சிறப்பான குருப்பெயர்ச்சியாகும்.

**அரசாங்க வேலை செய்பவர்களுக்கு:-** உங்களுக்கு ராஜஜோகம்தான். எதிர்பார்த்துக் காத்திருந்த வேலைவாய்ப்புக்கள் உடனடியாக கிடைக்கும். ஒரு சிலருக்கு பதவி உயர்வு, சம்பள உயர்வு கிடைக்கும். தேவையான இடத்திற்கு இடமாற்றம் கிடைக்கும். இந்தச் சந்தர்ப்பத்தில் அரசாங்கத்திலிருந்து சலுகைகள், உதவிகள் கிடைக்கும். இந்த குருபெயர்ச்சி உங்களுக்கு பல வகைளகளில் நன்மைகளை வாரி வழங்குவார். இந்த கால கட்டத்தில் அரசியல், அரசாங்கம் ஆதரவாகவும் லாபமாகவும் இருக்கும். அரசாங்க அனுகூலங்கள் பல வழிகளில் வந்து சேரும்.

**சொந்தத் தொழில் செய்பவருக்கு:-** இந்தக் குருப்பெயர்ச்சியால் அதாவது 7ஆம் இட குருவால் மிகவும் சிறப்பு பெறுகிறார். எதிர்பாராத முன்னேற்றங்கள் தொழில் வரும். முயற்சிகள் பல எடுத்தால் வெற்றி பல வழிகளில் வந்து சேரும். நடக்காமல் இருந்த காரியங்கள் கைகூடும். புதிய தொழில் முயற்சிகள் வெற்றிபெறும். ஏற்கனவே செய்து வரும் தொழிலில் முன்னேற்றம் காணப்படும். கூட்டு வியாபாரங்கள் செய்யும் சந்தர்ப்பங்கள் கூடிவரும். வெளிநாட்டு வழி தொடர்பு மூலம் ஆதாயம்வரும். அடிக்கடி வெளிநாடு செல்லும் சந்தர்ப்பம் வரும். இந்தக் குருப்பெயர்ச்சியால் புதிய ஒப்பந்தங்கள், புதிய காரியங்கள் போன்ற சந்தர்ப்பங்கள் வரும். 10.05.2008 முதல் 07.09.2008 வரை குருவக்ர காலம் கொஞ்சம் பின்வாங்கி நிற்கும். மீண்டும் 08.09.2008 முதல் எதிர்பார்க்கும் இடங்களில் இருந்து நல்ல செய்திகள், நல்ல தகவல்கள் வரும். மிகவும் சிறப்பான காலமாகும்.

# கணவனும் மனைவியும் கருத்தொருமித்து வாழ வழிகாட்டும் கேதார கௌரி விரதம்

கேதாரகௌரி விரதம் புரட்டாதி மாதப் பூர்வபக்க அட்டமியில் ஆரம்பித்து ஐப்பசி மாதத்து அபர பக்கச் சதுர்த்தசியில் நிறைவு பெறும்.

சக்தி விர தங்களுள் மகிமை வாய்ந்தது கேதார கௌரி விரதமாகும்.இருபத்தொரு தினங்கள் சக்தியை நினைத்து அனுஷ்டிக்கும் விரதமாகும். இந்த விரதத்தை இருபத்தொரு தினங்களும் அனுஷ்டிக்க இயலாதவர்கள் சதுர்த்தசித் தினத் திலாவது கேதாரநாதரை வேண்டி அனுஷ்டிக்கலாம்.

சர்வமும் சிவமயமே என்ற கொள்கைளுடையவர் 'பிருங்கி' என்னும் நாமத்தையுடைய முனிவர்.

சிவனை மட்டும் எப்பொழுதும் வணங்கி வரும் பிருங்கி முனிவர் வண்டுருத் தாங்கி பரமேஸ்வரரை மாத்திரம் வலம் வந்து பிரதட்சணம் செய்தார். அம்மையைத் தவிர்த்து விட்டார்.

பார்வதிதேவியார் இவற்றையெல்லாம் கண்ணுற்று கோபமடைந்து பூலோகம் சென்று சிவபெருமானின் உடலில் வாமபாகத்தை வேண்டித் தவம் செய்தார்.

கௌதமமுனிவரின் ஆலோசனைப்படி உமையம்மையார் சிறந்த விரதமாகிய கேதாரீஸ்வரர் விரதத்தை முறையாக அனுஷ்டித்தார். பரமசிவன் எழுந்தருளி உமையம்மையைத் தமது வாம பாகத்தில் அமர்த்திக் கொண்டார்.

அப்பொழுது இறைவி, இறைவனை நோக்கி இந்த விரதத்தை முறைப்படி அனுஷ்டிப்பவர் நீண்ட ஆயுளையும், சற்புத்திர பேற்றையும், சகல செல்வங்களையும் குடும்ப சுகங்களையும் இம்மையில் பெற்று இறுதியில் தேவரீர் திருவடித்தாமரைகளையும் அடைவதற்குத் திருவருள் புரியவேண்டும் என வேண்டினார். இறைவனும் அவ்வாறு அனுக்கிரகம் செய்து தேவியோடு அர்த்தநாரீஸ்வராக திருக்கயிலாயத்துக்கு எழுந்தருளினார்.

குடும்பத்தில் கணவனும் மனைவியும் கருத்தொருமித்து நல்வாழ்வு வாழ வேண்டியே கேதாரகௌரி விரதம் அனுஷ்டிக்கப்படுகின்றது. அடுத்து திருமணமாகாத கன்னிப் பெண்களும் தமக்கொரு நல்ல தலைவன் கிடைக்க வேண்டுமென நினைத்து அனுஷ்டிப்பதன் மூலம் திருமணம் நிறைவேறுகிறது.

ஞானக்கதிர்

குடும்பம் சீரோடும், சிறப்போடும், செழிப்போடும், சுகத்தோடும் அமைதியுடனும் வாழ சிவசக்தி வழிபாடு மிகவும் அவசியமானதாகும்.

இந்த வழிபாட்டில் பிரதானமாக முதலாம் நாள் கேதாரகௌரி நோன்புக் கயிற்றில் ஒரு முடிச்சுப் போடப்படும். தொடர்ந்து வரும் 21 தினங்கள் 21 முடிச்சுப் போட்டு நிறைவு நாளன்று இருபத்தொரு நெய்வேத்தியப் பொருள்களுடன் வழிபாடு நிறைவேற்ற நோன்புக் கயிற்றை கையில் கட்டுவர். இத்தகு மகிமை வாய்ந்த விரதத்தை அனுஷ்டித்து மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோமாக.

- அ.கலாநிதி.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விமானப் பொதிகள் சேவை

உங்கள் பொருள்கள் யாழ்.- கொழும்பு அல்லது கொழும்பு - யாழ். தினசரி விமானம் மூலமாக உடனுக்குடன் உத்தரவாதத்துடன் அனுப்பி வைக்கப்படும். உங்களுக்குத் தேவையான பொருள்களைக் கொழும்பில் கொள்வனவு செய்து அனுப்பிவைப்பதற்கும் ஏற்பாடுகள் செய்து தரப்படும். அத்துடன் பூதவுடல்களும் ஏற்றுக்கொள்ளப்படும். தேவை ஏற்படின் விமானம் சாட்டற் (Charted) செய்து கொடுக்கப்படும்.

| கொழும்பு - யாழ். 1Kg 250/= | SUB DEALERS தேவை | யாழ். - கொழும்பு 1Kg 200/= |
|---|---|---|

**EURO GROUP OF COMPANIES**

35, STATION RD., MOUNT LAVINIA. TEL.0113846998, 0114542190, FAX: 0114542360.
WELLAWATTE BRANCH: 11, VIHARA LANE, COL-06.
TEL: 0114969116, 0773661891.
JAFFNA BRANCH: 22,WYMAN RD.
TEL: 0212223974, 0774207963 (C54198)



# கொழும்பிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட விமால் (BIMAL) ஆயுள்வேத மருந்துகள்

★ அரிஷ்ட வகைகள் ★ ஆசவ வகைகள்
★ வாசகா சிறப் ★ லேகிய வகைகள்
★ குளிசை வகைகள் ★ சூரண வகைகள்
★ குவாத வகைகள் ★ கல்க வகைகள்

**மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள**

Manufactured By:
BIMAL OSU(PVT) LIMITED,
KOLONNAWA,
SRILANKA.

வட மாகாண ஏகவிநியோகஸ்தர்கள்:
**சிவா நறுமணப்பூங்கா**
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(சத்திரச் சந்திக்கு அருகில்).

(சி/54024)


# வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



மலர்வு
19
✱
12
✱
1940

உதிர்வு
26
✱
09
✱
2007

## திருமதி வேலாயுதபிள்ளை வனஜலோஜினி (பவா)

*கடந்த 26.09.2007 அன்று திடீரென எம்மைவிட்டுப் பிரிந்த எமது குடும்பத்தலைவி அவர்களின் மறைவுச்செய்தி கேட்டு வந்து எமது துயரில் பங்குபற்றி ஆறுதல் கூறி இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்ட உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள், அரச நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் வெளிநாடுகளில் இருந்து தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்கள் அனைவருக்கும் எமது நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.*

*அத்துடன் இன்று (09.11.2007) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ள வீட்டுக்கிருத்தியம், ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறவுள்ள மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

'திருவதிகை',
வேளாவை, அளவெட்டி.

**குடும்பத்தினர்.** (67719)

# அனலைதீவு பல நோ.கூ.சங்கம் – அனலைதீவு
# பொதுமுகாமையாளர் பதவி வெற்றிடம்

மேற்படி பதவிக்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவங்களை உரியமுறையில் தயாரித்து *"தலைவர், அனலைதீவு பல நோ.கூ. சங்கம் - அனலைதீவு"* என விலாசமிட்டு கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் பதவியின் பெயர் குறிப்பிட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல்வேண்டும்.

1. சம்பள அளவுத்திட்டம்
   கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சுற்றறிக்கை இல. 31/99
   4750 - 6850 - 10
   100x10-110x10
2. தகைமைகள்
   அ. கூட்டுறவுப் பணியாளர் 9ஆவது (11)சம்பளத்திட்டத்தில் முகாமை/ மேற்பார்வை மட்டத்தில் 2 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது 10ஆவது (12) சம்பளத்திட்டத்தில் மேற்குறித்த வண்ணம் 6 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.
   அல்லது
   ஆ. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் பட்டத்துடன் அல்லது அதற்கு இணையான பட்டத்துடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ தொழில்நுட்ப ஸ்தாபனமொன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் ஒரு வருடத்திற்குக் குறையாத அனுபவம்.
   அல்லது
   இ. கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திரம் உயர்தரம் க.பொ.த உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக தொழில்நுட்ப ஸ்தாபனம் ஒன்றில் முகாமை மட்டத்தில் 2 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.
3. வயதெல்லை - 18-45
   (தற்போது இச்சங்கத்தில் கடமையாற்றும் ஊழியர்கட்கு மட்டும் வயதெல்லை கிடையாது)
4. ஏனைய சங்கத்தில் பணிபுரிபவர் விண்ணப்பம் செய்யுமிடத்து தங்கள் சங்கத்தினூடாக விண்ணப்பிக்கவேண்டும்.
5. விண்ணப்ப முடிவுதிகதி - 20.11.2007

(67752)

**தலைவர்.**

# கொழும்புக் கண்காட்சியில் யாழ்.கைப்பணிப் பொருள்கள்

நல்லூர்,நவ.9

கைத்தொழில் துறையின் தேசிய மட்டத்திலான கைத்தொழில் கண்காட்சி இன்று வெள்ளிக்கிழமை முதல் ஞாயிற்றுக்கிழமை வரை மூன்று தினங்கள் கொழும்பு பண்டார நாயக்கா சர்வதேச மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கண்காட்சியில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த சிறுகைத்தொழில் உற்பத்திப் பொருள்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன. இதற்கென கடந்த மாதம் யாழ்.மாவட்டக் கைத்தொழில் கண்காட்சியில் இடம்பெற்று தேர்ந்தெடுக்கப்பட்ட சிறுகைத்தொழில் உற்பத்தியாளர்களின் 60வகையான கைப்பணிப் பொருள்கள் கொழும்புக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகக் கைத்தொழில் துறையின் யாழ். மாவட்ட அலுவலர் திருமதி பி.பெனிராஜ் தெரிவித்தார். (202-111)

# கேதாரகௌரி விரத பூசைகள்

யாழ்ப்பாணம்,நவ.9

நீர்வேலி காமாட்சி அம்பாள் ஆலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கேதார கௌரி விரத பூசைகள் இடம்பெறவுள்ளன.

அர்த்த நாரீஸ்வரப் பெருமானுக்கு விசேட அபிசேக ஆராதனைகள் நடைபெற்று சுவாமி வீதியுலா வருவார். தொடர்ந்து விரதகாரருக்கு நோன்பு நூல் வழங்கப்படும்.

அத்துடன் 'கேதார கௌரிவிரதமும் சிறப்பும் கௌரி காப்பும்' என்னும் நூல் வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது. (203)

✱ ✱ ✱

உரும்பிராய் கிழக்கு கண்ணகா பரமேஸ்வரி ஆலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை கேதார கௌரி விரத பூசைகள் இடம்பெறவுள்ளன.

தொடர்ந்து 'கேதார கௌரி விரத மகிமை என்ற பொருளில் மதுரகவி காரை எம்.பி அருளானந்தத்தின் சொற்பொழிவு இடம்பெறும். (203-111)

# நினைவுப் பரிசில்கள் வழங்கப்பட்டன


வடமராட்சி,நவ.9

மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தியாலயத்திற்கு பழைய மாணவர்களும் நலன் விரும்பிகளும் நான்கு நினைவுப் பரிசில்களை வழங்கியுள்ளனர்.

இளைப்பாறிய கல்வி அமைச்சின் கணக்காளர் இராஜ் சுப்பிரமணியம் அவரது தாயார் நினைவாக சகல துறைகளிலும் சிறந்து விளங்கும் மாணவர்களுக்கான நினைவுப் பரிசிலையும் ஆசிரியர் எஸ். கேதீஸ்வரன் பாடசாலையின் முன்னாள் அதிபர் அமரர் நவரத்தினசாமி சிவபாதசுந்தரம் நினைவாக புலமைப் பரிசில் பரீட்சையில் அதிக புள்ளிகள் பெற்ற மாணவருக்கான பரிசையும் திரு மதி தேவாம்பிகை தனது தந்தையார் நினைவாக ஆங்கில மொழித்திறனில் சித்தியடைந்த மாணவருக்கான பரிசையும் வேல் நந்தகுமார் முன்னாள் அதிபர் மு.பொன்னையா நினைவான பரிசையும் வழங்கியுள்ளனர். (203-160)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தாயின் மடியில்
10
✱
12
✱
1947



ஆண்டவன் அடியில்
10
✱
10
✱
2007

## அமரர் சிதம்பரம் செல்வராசா

(ஓய்வுபெற்ற பாதுகாப்பு உத்தியோகத்தர், சிமெந்து கூட்டுத்தாபனம்)

*கடந்த 10.10.2007 அன்று காலமான எமது குடும்பத்தலைவரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் மற்றும் அனுதாபம் தெரிவித்தவர்கள், தொலைபேசியில் எமது துயரில் பங்குகொண்டவர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவிப்பதோடு, நாளை (10.11.2007) சனிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.*

புகையிரத நிலைய வீதி,
மருதனார்மடம், இணுவில். (67719)

**குடும்பத்தினர்.**

# யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்
# வீதி வேலைக்கான கேள்வி அறிவித்தல்- 2007

கீழ்க்குறிப்பிட்ட வீதி வேலைக்காக யாழ்.மாநகரசபையில் பதிவு செய்துள்ள (ICTAD) நிர்மாண பயிற்சி நிறுவனத்தில் பதிவைக் கொண்டுள்ளதுடன் வற்வரி செலுத்துபவர்களும் மிகை தகைமை உடையவர்களுமான ஒப்பந்தகாரரிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

1. கேள்விப் பத்திரங்கள் 2007.11.14 ஆம் திகதி பி.ப.2 மணி வரை வழங்கப்படும்.
2. கேள்விப் பத்திரங்கள் 2007.11.21 ஆம் திகதி ந.ப. 12 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.
3. கேள்விகள் யாவும் 2007.11.21 ஆம் திகதி பி.ப.2 மணிக்கு திறந்து பரிசீலிக்கப்படும். அச்சமயம் கேள்விசமர்ப்பித்தவர்களோ அல்லது அவர்களின் பிரதிநிதிகளோ சமுகமளிக்கலாம்.
4. பூரணப்படுத்தப்பட்ட கேள்விப் பத்திரங்கள் கடித உறையில் இட்டு அரக்கு முத்திரையிட்டு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் வீதிப் பெயருடன் வீதி வேலைக்கான கேள்வி என எழுதி **மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம்** என முகவரியிட்டு பதிவுத் தபால் மூலமோ அல்லது இதற்கென ஆணையாளர் பணிமனையில் வைக்கப்பட்ட கேள்விப் பெட்டியிலோ நேரடியாகச் சமர்ப்பிக்கப்படவேண்டும்.
5. இவ்வீதி செப்பனிடலுக்குத் தேவையான தாரினை தற்போது யாழ்.மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் ஏனைய அரச நிறுவனங்கள் கொள்வனவு செய்யும் விலையில் மாநகர சபைக்கு ஒப்பந்தக்காரர்களே வழங்கி களஞ்சிய நடைமுறைக்கமைய பதிவுகளை மேற்கொண்ட பின் வீதிகளுக்கு பயன்படுத்த அனுமதிக்கப்படும்.
6. மேலதிக விவரங்களை யாழ்.மாநகராட்சியின் நல்லூர் இந்துவிடுதியில் அமைந்துள்ள வீதி வேலைப் பகுதி அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

| இல. | வேலையின் பெயரும் அமைவிடமும் | ஆகக்குறைந்த இக்ராட் பதிவு | மீளளிக்கக் கூடிய கேள்வி வைப்புப்பணம் | மீளளிக்க முடியாத கேள்வி வைப்புப்பணம் வற்வரி உட்பட | வற் |
|---|---|---|---|---|---|
| 1. | புதுமைமாதா கோயில் வீதி, குருநகர் | M9 | 1500.00 | 500.00 | 75.00 |
| 2. | நாகராசா வீதி, பாண்டியன்தாழ்வு | M9 | 4000.00 | 500.00 | 75.00 |
| 3. | மத்தியூஸ் வீதி, கொய்யாத்தோட்டம் | M9 | 5000.00 | 500.00 | 75.00 |
| 4. | ஐயனார்கோயில் வீதி, வண்ணார்பண்ணை | M9 | 2000.00 | 500.00 | 75.00 |
| 5. | செட்டித்தெரு உப ஒழுங்கை, (50/1), நல்லூர். | M9 | 1500.00 | 500.00 | 75.00 |

*குறிப்பு:* வேலைகள் யாவற்றையும் 2007.12.31ஆம் திகதிக்கு முன்னர் நிறைவுறுத்தி ஒப்படைத்து அவற்றிற்கான கொடுப்பனவையும் பெற்றுக்கொள்ளவேண்டும்.

**மு.செ.சரவணபவ,**
மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம். (சி/54299)

# எட்டாவது பிறந்ததின வாழ்த்து




பேக்கரி லேன், உடுப்பிட்டியைச் சேர்ந்த
**ஜெயநாதன்** *(நாதஸ்வர வித்துவான்)*
**கண்ணாம்பாள்** தம்பதியரின் செல்வப் புதல்வன்

**சரண்ராஜ்**

அவர்கள் தனது எட்டாவது பிறந்ததினத்தை இன்று (09.11.2007) வெள்ளிக்கிழமை தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார். சரண் குட்டியை அப்பா, அம்மா, உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் வல்லிபுர ஆழ்வார் ஆசியுடன் பல்கலையும் பெற்றுச் சீரும் சிறப்புடனும் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

*பேக்கரி லேன்,*
*உடுப்பிட்டி.*

*தகவல்:*
**அப்பா.**

(சி/54284)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# நோயை விடுத்து நோவுக்கு மருந்து செய்யும் மருத்துவர்கள்

நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த வேண்டுமானால் தமிழீழ விடுதலைப் புலிகளின் பயங்கரவாதத்தை முற்றாக - பூண்டோடு - ஒழித்துக்கட்ட வேண்டும் எனச் சூளுரைத்திருக்கின்றார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. அதைத் தவிர தமது அரசுக்கு வேறு மார்க்கமில்லை என்றும் அவர் கூறியிருக்கின்றார்.

தமது அரசின் மூன்றாவது வரவு - செலவுத் திட்டத்தை நிதி அமைச்சர் என்ற முறையில் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து உரையாற்றுகையிலேயே அவர் இப்படிக் கூறியிருக்கின்றார்.

கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக - கால் நூற்றாண்டாக - இந்தப் பயங்கரவாதம் நாட்டைச் சீரழித்து வருகின்றது என்றும் நாட்டின் பொருளாதாரம், அபிவிருத்தி என்பவற்றில் பலத்த பின்னடைவுகளை அது ஏற்படுத்தி இருக்கின்றது என்றும் அவர் விசனித்திருக்கின்றார்.

இந்தக் கால்நூற்றாண்டு காலமாக இந்தப் பயங்கரவாதப் பிரச்சினைக்கான தீர்வு, அதை அடியோடு ஒழிப்பதுதான் என்றே இலங்கைத் தீவின் முன்னைய அரசுத் தலைவர்களும் கூறிவந்தனர். அதையே இப்போதைய அரசுத் தலைவரும் மீண்டும் சூளுரையாக நாடாளுமன்றில் விடுத்திருக்கின்றார்.

நோய்க்கு மருந்து செய்யச் சொன்னால், நோய்க்கான மூலத்தைக் கண்டறிந்து அதற்கு மருந்து செய்ய வேண்டும். அதை விடுத்து, நோயின் வெளிப்பாடான நோவுக்கு மருந்து செய்வதில் அர்த்தமில்லை. அது சில சமயங்களில் நோயினால் உருவாகும் நோவைத் தற்காலிகமாகக் குறைக்க - அல்லது சமாளிக்க - உதவக்கூடும். ஆனால் நோவுக்கு மருந்து செய்வது, நோயிலிருந்து மீட்சியைப் பெற்றுத் தராது. இது வைத்தியனுக்குத் தெரிந்திருக்க வேண்டிய அடிப்படை விடயம்.

அதேபோல, இலங்கையைப் பீடித்திருக்கும் மோசமான நோய் இனப்பிரச்சினை. அந்த நோயின் வெளிப்பாடுதான் - நோவுதான் - தமிழ் இளைஞர்களின் தீவிரவாதம். அதையே தென்னிலங்கைச் சிங்களம் 'பயங்கரவாதம்' என்று அடையாளப்படுத்துகின்றது.

ஆகவே, இந்தத் தீராத பிணியிலிருந்து இலங்கைத் தீவு விடுபட வேண்டுமானால் இனப்பிரச்சினை என்ற நோயை நிரந்தரமாகக் கட்டுப்படுத்துவதற்கு மருந்து செய்ய வேண்டுமே தவிர, அந்த நோயின் வெளிப்பாடான தமிழர் தீவிரவாதம் என்ற பயங்கரவாதத்துக்கு மருந்து செய்ய முற்படுவது பயனற்றது. அது நோய் தீரவோ, அதிலிருந்து நிரந்தர மீட்சி பெறவோ வழிசெய்யாது.

நாட்டின் அரசுத் தலைவர்களாக இதுவரை வந்த வைத்தியர்களுக்கு இந்தச் சிகிச்சை விவகாரத்தின் அடிப்படையே புரியாததால் நோயை விட்டு, நோவுக்கு மருந்து செய்வது குறித்தே அவர்கள் அதிகம் பிரபலாபித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

இலங்கையை ஆட்டிப் படைத்துவரும் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதன் மூலமே இச்சிக்கலுக்கு முடிவு கட்டலாமே தவிர, தமிழர் தரப்பின் தீவிரவாதத்தை ஒடுக்க முயலுவதன் மூலம் அல்ல.

தமிழர் அடக்கப்பட்டதால் - நீதியற்ற முறையில் ஒடுக்கப்பட்டதால் - நியாயமற்ற முறையில் அடிமைப்படுத்தப்பட்டதால் - அவர்களது இருப்பு மற்றும் கௌரவ வாழ்வுக்கான சுதந்திரங்கள் பறிக்கப்பட்டதால் - அதன் பெறுபேறாகவே, அடக்குமுறை நோயின் வெளிப்பாடாகவே, தமிழரின் விடுதலைப் போராட்ட எழுச்சி வீறுகொண்டு ஈழத் தமிழரின்ஆயுதம் தாங்கிய தேசிய விடுதலைப் போராட்டமாக அது பரிணமித்தது என்பது கண்கூடு. அதுவே சரித்திரமும் ஆகியுள்ளது.

ஆகவே, தமிழர்களின் நியாயமான அபிலாஷைகளை நிறைவுசெய்து, அதன்மூலம் இலங்கைத் தீவின் தேசிய இனப்பிரச்சினைக்கு நீதியான தீர்வுகாண தென்னிலங்கைச் சிங்கள அரசு முன்வருமானால், அதுவே இவ் விவகாரத்தைச் சுமுகமாகத் தீர்த்து வைக்கும் ஒரே வழியாக - மார்க்கமாக - மருந்தாக - இருக்கும்.

அதைவிடுத்து, கடந்த இரண்டரை தசாப்த காலமாகத் தென்னிலங்கை ஆட்சித் தலைவர்கள் தொடர்ந்து முழங்கி வந்தமை போலவே, இப்போதைய அரசுத் தலைவரும் 'பயங்கரவாதத்தை அடியோடு ஒழிப்போம்!' என்று சூளுரைத்து, மார்தட்டுவதில் அர்த்தமில்லை; பயனில்லை. அது இலங்கைத் தீவின் தேசிய இனங்களை மென்மேலும் பிளவுபடுத்தி, முரண்பாடுகளைத் தீவிரமாக்கி, நிலைமையை மேலும் மோசமடையவே வழி செய்யும்.

எனவே, நீதியாக இனப்பிரச்சினையை - அமைதி முறையில் - சமாதான வழியில் - தீர்ப்பதற்குத் தென்னிலங்கைத் தலைமை விரும்பினால் அது முதலில் தமிழர்களின் நியாயமான அபிலாஷைகளைப் புரிந்து கொள்ள வேண்டும்.

தமிழ் மக்கள் தமது சொந்த மண்ணில், வரலாற்று ரீதியாக வாழ்ந்து வந்த பாரம்பரிய பூமியில், அந்நிய சக்திகளின் ஆதிக்கம், தலையீடு, அடக்குமுறையின்றி, சுதந்திரமாக, கௌரவமாக வாழ விரும்புகின்றார்கள். தமது மொழியை வளர்த்து, தமது பண்பாட்டைப் பேணி, தமது பொருளாதாரத்தை மேம்படுத்தி, தமது இன அடையாளத்தைப் பாதுகாத்து வாழ விரும்புகின்றார்கள். தமது தாயக மண்ணில், தம்மைத் தாமே ஆளும் சுயாட்சி உரிமையோடு அவர்கள் வாழ விரும்புகின்றனர். இதுவே தமிழர்களின் அரசியல் அபிலாஷை.

இதனைப் புரிந்துகொண்டு, இதற்கேற்ப தீர்வை முன்வைப்பதை விடுத்து 'பயங்கரவாதத்தை ஒழிப்போம்!' என்று மார்தட்டுவதால் விவகாரம் மேலும் சிக்கலாகுமே தவிர, தீர்வு கிட்டாது. அதுவே யதார்த்தம். இதைத் தென்னிலங்கை புரிவது எப்போது..........?

# குடாநாட்டின் கிராமிய வைத்தியசாலைகளுக்கு மூத்த வைத்தியர்களை நியமிக்க சிவப்புக்கொடி!

யாழ்ப்பாணம், நவ.9

யாழ்ப்பாணத்தில் இயங்கும் அரசாங்க கிராமிய வைத்தியசாலைகளில் 67 வயதுக்கு மேற்பட்ட வைத்தியர் களை நியமிப்பதற்கு, வடக்கு மாகாண சபையின் சுகாதார அமைச்சு சிவப்புக் கொடி காட்டியிருப்பதாக அறியவந்துள்ளது.

இதனால் குடாநாட்டில் பதினொரு அரச வைத்தியசாலைகளுக்கு டாக்டர்களை நியமிக்க முடியாத நிலை உண்டாகும்என்று சுட்டிக்காட்டப்படுகிறது வட மாகாணத்தில் இயங்கிவரும் வைத்தியசாலைகளில் வைத்தியர்களாக ஒப்பந்த அடிப்படையில் மீள் நியமனம் செய்யப்பட்டு கடமை புரிந்து வரும் வைத்தியர்களின் மீள் நியமன விண்ணப்பங்களை அவர்கள்67வயதிற்குமேலும்சேவையாற்ற விண்ணப்பித்தால் அவ்விண்ணப்பங்களை சிபாரசு செய்து தமக்கு அனுப்பி வைக்க வேண் டாம் என்று வடமாகாண சுகாதார சேவை கள் பணிப்பாளர் டாக்டர் க.நந்தகுமாரன் யாழ் பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்துக்கு அறிவுறுத்தல் அனுப்பி வைத்துள்ளார் என்று தெரிய வந்துள்ளது.

யாழ் மாவட்டத்தில் இயங்கும் வைத்தியசாலைகளில் சேவையாற்றும் வைத்தியர்களில் 67 வயதை அடைந்த மூத்த வைத்தியர்கள் ஒப்பந்த அடிப்படையில்மீளவும்கடமையாற்றயாழ் பிராந்திய சுகாதாரப் பணிமனை மூலம் வடக்கு மாகாண சுகாதார அமைச்சுக்கு கோரிக்கை முன்வைக்கப்பட்டது. ஆனால் இந்த நியமனக் கோரிக்கைகள் ஆளுநரால் அனுமதிக்கப்படவில்லை எனத் தெரியவந்துள்ளது.

இந்த நடவடிக்கை காரணமாக யாழ் மாவட்டத்தில் பதினொரு வைத்தியசாலைகள் வைத்தியர்கள் இன்றி இயங்க முடியாத நிலை உருவாகலாம் என அறியப்படுகிறது.

(அ-51)

# இங்குள்ள அரச சார்பற்ற நிறுவனங்களின் பணிகளுக்குப் படைத்தரப்பு உதவும்

## திங்களன்று நடைபெற்ற சந்திப்பில் யாழ். படைத்தளபதி தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.9

யாழ். மாவட்டத்தில் அரச சார்பற்ற நிறுவனங்கள் மக்களுக்காக மேற்கொள்ளும் ஆக்கபூர்வமான பணிகளுக்கு தேவைப் படும் உதவிகளைப் படைத்தரப்பு வழங்கும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

இங்கு இயங்கும் அரசார்பற்ற நிறுவனங்களைக் கடந்த திங்கட் கிழமை சந்தித்துப் பேசிய யாழ். இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி இதனைத் தெரிவித்தார்.

இருபத்தொரு அரச சார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

யுனிசெவ், யு.என்.டி.பி., யு.என்.ஏச்.சி.ஆர், வோள்ட்விஷன், செஞ்சிலுவை சர்வ தேசக்குழு, ஐ.ஓ.எம் உள்ளிட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் இச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

காங்கேசன்துறையில் கடந்த திங்கட் கிழமை நடை பெற்ற இச் சந்திப்பில் அரச சார்பற்ற அமைப்புக்களின் பிரச்சினைகள் பற்றி விரிவாக ஆராயப் பட்டது.

விஷேடமாக அரசசார்பற்ற நிறுவனங்கள் கடந்த 6 மாத காலத்திற்கு மேற்கொண்ட அபிவிருத்தி திட்டங்கள் சம்பந்தமாக ஆராயப்பட்டது. மேற்படி அரச சார்பற்ற நிறுவனங்கள் மேற்கொள்ளும் வேலைத் திட்டங்களை வெவ்வேறாக விளக்குமாறு பிரதிநிதி களிடம் படைத்தளபதி கேட்டுக் கொண்டார்.

யாழ்ப்பாணம்- திருகோணமலை கப்பல் பயண ஒழுங்குகளை மேற்கொள்ளும் போது, பொது மக்களுக்கு இராணுவத்தினர் இன்னும் மேலதிகமாக வாகன வசதிகள், வைத்திய வசதிகள், தங்குமிட வசதி கள் ஏற்படுத்திக்கொடுப்பது சம்பந் தமாக நீண்டநேரம் கலந்துரையாடப் பட்டது. சுனாமியால் பாதிக்கப்பட்ட வீடுகளை திருத்தும் நடவடிக்கை மேற்கொண்டதனால் சுனாமி புதிய வீடுத் திட்டம் நடவடிக்கையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் யாழ்ப்பாண பகுதியில் இடம்பெயர்ந்தோருக்கு நிரந்தர வீடு கிடைத்துள்ளதாகவும், கண்ணி வெடி அகற்றும் நடவடிக்கையில் முன்னேற்றம் உள்ளதாகவும் அங்கு தெரிவிக் கப்பட்டது.

அரச நிறுவனங்களால் மேற்கொள்ளப் படும் நிர்மாண வேலைத் திட்டங் களு க்கு தேவையான சிமெந்து போன்றவைகளை எடுத் து வர தேவையான கப்பல் வசதிகள் அத்தியாவசிய சேவை அதிகாரிகளின் அனுமதி யுடன் இராணுவத்தின் ஒத்துழைப்பை பெற்றுத்தந்து பொருள்களை பகிர்ந் தளிக்கவும், வேறு முக்கிய தேவையான பொருள்களைக் கொண்டுவர தேவையான சகல ஒத்துழைப்பு வழங் கப்படும் என்று யாழ். தளபதி தெரி வித்தார்.

யாழ். பிரதேசத்தில் இடம் பெறும் பாதுகாப்பு நிலைப்பாட்டிற்கு ஏற்ப மேற்கொள்ளப்படும் நடவடிக்கை முக்கியமானதாகவும், அதனைத் தொடர்ந்து மேற்கொள்ள பாதுகாப்பு படையினர் வழங்கும் ஒத்துழைப்புக்கள் பற்றியும் விளக்கம் அளிக்கப்பட்டது. இறுதியாக அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் பொது மக்களுக்கு செய்யும் பணிக்கும் இராணுவத் தளபதி மனப்பூர்வமான நன்றியைத்தெரி வித்துக் கொண்டார்-என்று சந்திப்புக் குறித்து படைத் தலைமையகம் விடுத்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# கூட்டுறவுச் சங்கத்தின் பால் லீற்றர் 45 ரூபாவாக நிர்ணயம்

யாழ்ப்பாணம்,நவ.9

யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தால் பாலின் விற்பனை விலை லீற்றர் 45 ரூபாவாகவும் கொள்வனவு விலை லீற்றர் 37 ரூபாவாகவும் நிர்ணயிக் கப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்தில் பால் உற்பத்தியையும் விற்பனையையும் மேம்படுத்தும் பொருட்டு அரச அதிபர் தலைமையில் கடந்த மாதம் யாழ். செயலகத்தில் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

அக் கலந்துரையாடலின் போதே மேற்கண்ட தீர்மானம் எடுக்கப்பட்டது.

பால் உற்பத்தியாளர்கள், விற்பனையாளர்களின் நன்மை கருதி எடுக் கப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினால் விரைவில் பொதி செய்து பால் விற்பனைக்கு விடப் படும்.

பாலின் தரம் உறுதி செய்யப்பட வேண்டும், தரமான பாலை எக் காரணம் கொண்டும் சங்கம் கொள்வனவு செய்யாமல் திருப்பி அனுப்பக் கூடாது.

யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினரால் உற்பத்தி செய்யப்படும் கால்நடைத் தீவனத்தில் உள்ளடங்கும் உள்ளீடுகளின் வீதாசாரங்களும் தரநிர்ணயமும் கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்கள உதவிப் பணிப்பாளரின் சிபார்சுக்கமைய பேணப்படும். தன்னிச்சையாக எந்தச் சங்கமும் கால்நடைத் தீவனத்தை உற்பத்தி செய்ய முடியாது.

கால்நடைத் தீவன உற்பத்திக்காக விவசாயிகளிடமிருந்து சோளம் கிலோ 50 ரூபா வீதம் யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் கொள்வனவு செய்யும். (203)

# உயர்தரப் பரீட்சை முடிவுகள் அடுத்த மாதம் முதல் வாரத்தில்

யாழ்ப்பாணம்,நவ.9

க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் அடுத்த மாதம் முதல் வாரத்தில் வெளிவரும் என்று பரீட்சை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஓகஸ்ட் மாதம் இடம் பெற்ற இப் பரீட்சைக்கான வினாத்தாள்களை திருத்தும்பணி ஆசிரிய தொழிற் சங்கங்கள் மேற்கொண்ட பகிஷ்கரிப்புப் போராட்டம் காரணமாக இழுபறி நிலையில் காணப்பட்டமையினால் விடைத்தாள் திருத்தும் பணி தாமதமுற்று பாதிக்கப் பட்டிருந்தது.

கல்வியமைச்சு மேற்கொண்ட பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து விடைத்தாள் திருத்தும் பணிகள் இடம் பெற்று முடிவடைந்துள்ளன. தொடர்ந்து பரீட்சைக்கு தோற்றிய மாணவர் களுக் கான பெறுபேறுகளை பதிவு செய்து அனுப்புவதற்கான நடவடிக்கையில் பரீட்சைத் திணைக்களம் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது. (அ-68)

## நாளை

| | |
|---|---|
| ஐப்பசி - 24 | சனிக்கிழமை 10.11.2007 |
| திதி : பிரதமை முழுவதும் | |
| நட்சத்திரம் : | விசாகம் பின்னிரவு : 01.19 |
| சுபநேரம் | : 03.05 - 04.35 |
| ராகுகாலம் | : 09.05 - 10.35 |

கந்தசஷ்டி விரதாரம்பம்

## பரிசளிப்பு விழாவும் நிறுவுனர் தினமும்

பருத்தித்துறை ,நவ.9

பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலய நிறுவுனர் தினமும் பரிசளி ப்பு விழாவும் நாளை சனிக்கிழமை பாடசாலை அதிபர் ஆ.ஜெகநாதன் தலைமையில் இடம் பெறவுள்ளன.

இவ் விழாவிற்கு பிரதமவிருந்தினராக கே.பி.ஆனந்தநடேசன் கலந்து கொள்வார். (218)

## பரு. தேசிய சேமிப்பு வங்கியின் சேவைகள் கணனி மயமாகின்றன

பருத்தித்துறை ,நவ.9

பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கி வாடிக்கையாளர்களுக்கான கணனி மயப்படுத்தப்பட்ட வங்கிச் சேவையை திங்கட்கிழமை முதல் ஆரம்பிக்கிறது. தேசியசேமிப்பு வங்கியின் இலத்திரனியல் வலைப் பின்னலுடன் பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கியும் இணைக்கப் பட்டுள்ளது.

இதன் ஆரம்பவிழா பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் எம்.பரமானந்தம் தலைமையில் நடைபெறவுள்ளது. யாழ். அரசாங்க அதிபர் கே.கணேஸ் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு இப் புதிய சேவையை ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

பருத்தித்துறை பங்குத்தந்தை அருட்திரு பயஸ்இருதயதாஸ் அடிகளார், சுவாமி சித்ரூபானந்தா ஆகியோர் ஆசியுரை வழங்குவார்கள்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ். மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி, யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ பீட பேராசிரியர் எம்.நடராஜசுந்தரம், வடமராட்சிவடக்குபிரதேசசெயலர் ஆர்.வரதீஸ்வரன், வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன், பருத்தித்துறை நகரசபை செயலாளர் ஏ.ஏ.நடராஜா ஆகியோர் கலந்து கொள்வார்கள் (அ-218)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திஸ்ஸமகராமவில் தொடர்ந்து பதற்றம்: நேற்றும் இரண்டு சடலங்கள் மீட்பு!

கொழும்பு, நவ.09

விறகு வெட்டக் காட்டுக்குச் சென்றனர் எனத் தெரிவிக்கப்படும் ஆண்கள் மூவரின் சடலங்கள் வெட்டுக்காயங்களுடன் கடந்த செவ்வாய்க்கிழமை திஸ்ஸமகராமப் பகுதியில் மீட்கப்பட்ட பரபரப்பு அடங்குவதற்குள், நேற்றுக்காலை மேலும் இரு ஆண்களின் சடலங்கள் வெட்டுக்காயங்களுடன் அப்பகுதியில் மீட்கப்பட்டிருக்கின்றன.

இந்தத் தொடர் பதற்றத்தை அடுத்து அரசின் உத்தரவுக்கமைய திஸ்ஸமகராமப் பகுதி எங்கும் பாதுகாப்பு பன்மடங்கு பலப்படுத்தப்பட்டிருக்கின்றது எனப் பாதுகாப்பு வட்டாரங்கள் அறிவித்திருக்கின்றன.

திஸ்ஸமகராம காட்டுப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படும் சூட்டுச் சத்தத்தையடுத்து நேற்றுக்காலை படையினர் மேற்கொண்ட தேடுதல் வேட்டையின் போதே இருவரின் சடலங்களும் காலை 8.45 மணியளவில் மீட்கப்பட்டன.

அதே பகுதியின் 7ஆம் கொலணியைச் சேர்ந்த கூலித் தொழிலாளிகள் என அடையாளம் காணப்பட்டிருக்கும் இந்த இருவரின் சடலங்களும் பிரேதப் பரிசோதனைக்காக நேற்று திஸ்ஸமகராம தள வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டன என அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன.

இதற்கிடையே இவ்வாறான தொடர்ச்சியான சம்பவங்களால் ஏற்பட்டிருக்கும் பதற்றத்தையடுத்து திஸ்ஸமகராம மற்றும் கதிர்காமம் பகுதிகளில் புதிதாக 9 பொலிஸ் சோதனைச் சாவடிகள் திறக்கப்பட்டுள்ளன என்றும் -

350 பொலிஸார் அடங்கிய புதிய படையொன்று பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருக்கின்றது என்றும் -

பொதுமக்களுக்கு அறிவுறுத்தும் விளக்கக் கூட்டங்களையும் பொலிஸார் ஆங்காங்கே நடத்தி வருகின்றனர் என்றும் -

தமிழ் மக்கள் செறிந்து வாழும் பகுதிகள் எங்கும் 24 மணிநேர கண்காணிப்பு ரோந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றன என்றும் -

இராணுவச் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தகவல் தெரிவித்தார். (சி)

## டோஹா தீ விபத்தில் 3 இலங்கையர் பலி!

கொழும்பு, நவ. 09

கட்டார், டோஹாவில் விடுதி ஒன்றில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு தீ விபத்து ஒன்றில் இலங்கையர் மூவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்திருக்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கட்டாரிலுள்ள முத்தாள் நிறுவனத்தில் பணிபுரிபவர்கள் தங்கியிருந்த விடுதியே தீ விபத்துக்குள்ளாகியிருக்கிறது. அந்த விடுதியில் இருந்த குளிரூட்டியில் ஏற்பட்ட மின் ஒழுக்குக் காரணமாகவே இந்த விபத்து ஏற்பட்டது என்று ஆரம்பகட்ட விசாரணைகள் மூலம் தெரியவந்திருக்கிறது.

தீவிபத்து ஏற்பட்ட நேரத்தில் அந்த விடுதியில் இலங்கையர் சுமார் இருநூறு பேர் வரை தங்கியிருந்தனர் என்றும் எனினும் அவர்களில் மூவரைத்தவிர வேறு எவருக்கும் அதில் பாதிப்பு ஏற்படவில்லை என்றும் - தெரிவிக்கப்பட்டிருக்கிறது. உயிரிழந்தவர்கள் மூவரும் முஸ்லிம்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. (சி)

## இலங்கை அரசாங்கத்திற்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போர்நிறுத்தக் கண்காணிப்பு குழுத்தலைவருடனான சந்திப்பின் பின்னர் இச்சந்திப்பு தொடர்பாக அரசியல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் கூறியதாவது:-

பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வன் மீது சிறீலங்கா வான்படை குண்டுவீசிப் படுகொலை செய்தமை குறித்த எமது கண்டனத்தைத் தெரிவிப்பதற்காக போர்நிறுத்த கண்காணிப்புக் குழுத்தலைவரை வன்னிக்கு அழைத்திருந்தோம். பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வன் மீதான தாக்குதல் போர்நிறுத்த ஒப்பந்த மீறல் என்பதை அவரிடம் வலியுறுத்தி இருக்கின்றோம்.

சமாதானப் பேச்சுவார்த்தைக்கு தலைமை தாங்கிச் செயற்பட்ட, தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக உழைத்த அரசியல்துறைப் பொறுப்பாளர் மீது நடத்தப்பட்ட இத் தாக்குதலை இச்சந்திப்பில் வன்மையாகக் கண்டித்தோம். அத்துடன் எமது இக் கண்டனத்தை கண்காணிப்புகுழு தலைவர் ஊடாக நேர்வே அரசாங்கத்துக்கு தெரியப்படுத்தி இருக்கின்றோம்.

### சமாதானப் பேச்சு தயாரிப்பு பணி நடக்கும் இடத்திலேயே கொலை

பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வன் எவ்வாறு படுகொலை செய்யப்பட்டார் என்பதையும் அவர் படுகொலை செய்யபட்ட இடத்தின் முக்கியத்துவம் குறித்தும் கண்காணிப்புக் குழுத் தலைவருக்கு தெரியப்படுத்தினோம். சமாதானப் பேச்சுக்கான தயாரிப்பு வேலைகள் நடைபெறும் பகுதியில் வைத்தே பிரிகேடியர் சு.ப. தமிழ்ச்செல்வன் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்.

எனவே பிரிகேடியர் சு.ப.தமிழ்ச் செல்வன் படுகொலைக்கு எதிராக நோர்வே உடனடியாக அனைத்துலகின் உதவியுடன் சிறிலங்கா அரசாங்கத்துக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதைகண்காணிப்புக்குழுத் தலைவரிடம் வலியுறுத்தியுள்ளோம்.

சமாதானப் பேச்சுவார்த்தைக் குழுவுக்கு பொறுப்பாக இருந்த ஒருவரை படுகொலை செய்ததன் மூலம் பேச்சுவார்த்தையின் மூலம் இனப் பிரச்சினைக்கான தீர்வை ஒரு போதும் காணமுடியாது. படைத்துறை அழுத்தங் களின் ஊடாக பேச்சுவார்த்தைக்கு அழைத்து, படைத்துறை வல்லாதிக்க நிலையில் இருந்து கொண்டும் எந்த ஒரு இன பிரச்சினையையும் தீர்க்க முடியாது. அப்படித் தீர்த்ததாக வரலாறும் இல்லை.

பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வனின் இழப்புத் தொடர்பாக தமிழகத்தில் மக்கள் பல்வேறு வடிவங்களில் தமது உணர்வுகளை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அங்குள்ள மத்திய அரசும் இதனை உணர்ந்துகொள்ளும் என்று நினைக்கின்றேன் என்றார்.

இச் சந்திப்பில் விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் சீ.புலித்தேவனும், படைத்துறைப் பேச்சாளர் இராசையா இளந்திரையனும் கலந்துகொண்டனர்.

## மோதலில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசிய வைத்தியசாலையிலும் மற்றும் ஜெயவர்த்தனபுர வைத்தியசாலையிலும் சிகிச்சை பெற்றுவருகின்றனர். கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் படையினரை நேற்றுப் பகல் எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க இருவரும் வைத்தியசாலைக்குச் சென்று பார்வையிட்டதுடன் அவர்களின் சுக துக்கங்களையும் கேட்டறிந்தனர் என்று கூறப்பட்டது. (சி)


## பதவி நீக்கம்

இதுவரை காலம் யாழ். பெரிய கடை ஜும்மா மொஸ்க் பள்ளியில் கடமை ஆற்றிய **இர்பான் மௌலவி** அவர்கள் தற்சமயம் கடமையில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

இப்பொழுது 01.11.2007 இருந்து புதிய **மௌலவியாக அத்திப்பர் ரகுமான்** அவர்கள் கடமையில் நியமிக்கப்பட்டுள்ளார்.

மொஹிதீன் ஜும்மா பள்ளிவாசல்,
No 34 ஜும்மா பள்ளி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

தனாதிகாரி.


## கருணா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னஞ்சல் மூலம் அனுப்பிவைத்துள்ள செய்தியில் இதனைக் குறிப்பிட்டிருக்கின்றார்.

அந்த மின்னஞ்சலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு-

1951ஆம் ஆண்டின் அகதிகள் ஒப்பந்தத்தின்படி ஒரு தனி நபர் பெரிய ஒரு குற்றத்தை அல்லது மற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டார் என்று கருத இடமளிக்கக்கூடிய பாரிய காரணங்கள் இருக்கும் பட்சத்தில் அவருக்கு தஞ்சம் கிடைக்காமல் போக வழியிருக்கின்றது.

### ஆதாரம் கிடைத்தால் விசாரிக்கப்படும்

அதேவேளை, தஞ்சம் கோரும் நபர்கள் அவர்களது நாட்டில் துன்புறுத்தக்கூடிய சந்தர்ப்பம் இருக்கிறது என முகாந்திரங்களுடன் அஞ்சினாலும் அவர்கள் குற்றங்கள் புரிந்திருப்பதாக முகாந்திரம் இருக்கும் பட்சத்தில் அவர்களை அவர்களது சொந்த நாட்டுக்கே திருப்பி அனுப்ப இந்த அகதிகள் ஒப்பந்தம் அனுமதிக்கின்றது என்றும் அவர் மேலும் கூறினார்.

ஆனால் தனிப்பட்ட வழக்குகளைப் பற்றி தாங்கள் கருத்து தெரிவிப்பதில்லை என்றாலும், போர்க் குற்றங்களில் ஈடுபட்டதாக ஆதாரம் கிடைத்தால் அது குறித்து விசாரிக்கப்படும்.என்றும் அவர் தெரிவித்தார்.

பிரிட்டிஷ் உள்துறை அமைச்சக அதிகாரிகள் கருணா விடயத்தில் இவ்வாறான கருத்தை வெளியிட்டுள்ள நிலையில் இலங்கையிலிருந்து வெளியாகும் மோர்னிங் லீடர் என்ற தினசரி கருணா பிரிட்டனுக்கு வந்ததற்கு ஒரு போலி பாஸ்போட் கொடுத்து இலங்கை அரசு உதவியதாகக் குற்றம் சாட்டியிருக்கின்றது.

பிரிட்டனுக்கு கருணா வருவதற்கான விசாவினைப் பெறுவதற்கான சிபார்சினை இலங்கை அதிகாரிகளே செய்திருந்தார்கள் என்று கூறப்படுவதை இலங்கை மறுத்துள்ளது.

இது தொடர்பான செய்திகள் குறித்து அந்தப் பத்திரிகையில் வெளியான கருத்துக்களை வெறும் அனுமானங்கள் என்று குறிப்பிட்ட இலங்கை வெளியுறவு அமைச்சின் செயலரான பாலித கொஹன அவற்றை இலங்கை அரசு மறுப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

## இராணுவ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குடாநாட்டின் களநிலைமை மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் போன்ற பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டன என்று கூறப்பட்டது. எதிர்காலத்தில் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து குடாநாட்டில் உள்ள படை அதிகாரிகளுக்கு ஆலோசனைகளை இராணுவத் தளபதி வழங்கினார் - என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (சி)

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆயுதக் கப்பல்களைக் கண்டறிந்து இடைமறிப்பதற்கும் பெரிதும் உதவும் என்று தூதுவர் அங்குஉரையாற்றிய போதுதெரிவித்தார்.

இலங்கை அரசாங்கம் மனித உரிமைகளை முழுமையாகமதிக்க வேண்டியது முக்கியம்.இலங்கைஇனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கேட்டுக் கொண்டார். (அ-1)


## பரீட்சை வினாத்தாள்

தரம் 01 முதல் O/L வரையான மூன்றாம் தவணைப் பரீட்சை வினாத்தாள்கள் பெறலாம்.

0776510149


## மரண அறிவித்தல்கள்

### சரவணமுத்து சின்னத்துரை

(பிரபல முன்னாள் வர்த்தகர்)



வேலணை,பள்ளம்புலத்தைப் பிறப்பிடமாகவும் திருவான்மையூர், சென்னையை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து சின்னத்துரை 6.11.2007 செவ்வாய்க்கிழமை இந்தியாவில்காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவக்கொழுந்துவின் அன்புக் கணவரும் சறோஜினிதேவி யின் (இந்தியா)பாசமிகு தந்தையும் சிவானந்தனின் (பொறியியலாளர்-ஓமான்) அன்பு மாமனும் வித்தியசுமங்கலை (பொறியியலாளர்-இந்தியா), நிவேதிதா (பொறியியலாளர்-இந்தியா), நிராகுலன் (மருத்துவபீடம் -அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 7.11.2007 புதன்கிழமை இந்தியாவில் நடைபெற்றன

இந்தஅறிவித்தலைஉற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தொலைபேசி :00914424520528 வே.ஞானகாந்தன் (பேரமகன்)

### சத்துருலிங்கம் திருச்செல்வம்



குப்பிழானைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சத்துருலிங்கம் திருச்செல்வம் (சொக்கர்) 07.11.2007 புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சத்துருலிங்கம்-சின்னாச்சி தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்ற முருகுப்பிள்ளை மற்றும் சின்னமணி தம்பதியரின் அன்பு மருமகனும் பரமேஸ்வரியின் அன்புக்கணவரும் சரோஜினிதேவி (சுவிஸ்), கிருஷ்ணகுமார் (சிறுவர் உரிமை மேம்பாட்டுஅலுவலர்-நுவரேலியா பிரதேசசெயலகம்), காலஞ்சென்ற சந்திரகுமார் மற்றும் பத்மாவதி ஆகியோரின் அன்புத் தந்தையும் தனபாலன்(சுவிஸ்), சண்முகவதனி (ஆசிரியை- கம்பளை வெஸ்ரோல் வித்தியாலயம்) ஆகியோரின் அன்புமாமனும் அந்தூரியா,ஆதித்தியா, ஆர்வலன்,சங்காரணி ஆகியோரின் பேரனும் காலஞ்சென்ற சிவஞானம்மா, விநாயகமூர்த்தி, சிவலிங்கம் (டென்மார்க்) ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(9.11.2007) வெள்ளிக் கிழமைஅவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் ஒரு மணியளவில் குப்பிழான்,காடாகரம்பை மயானத்திற்கு தகனத் திற்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்தஅறிவித்தலைஉற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குப்பிழான் தெற்கு,
குப்பிழான்.

தகவல்:
தி.கிருஷ்ணகுமார் (மகன்).

(67759)

### வேலுப்பிள்ளை செல்லத்துரை

(செல்லத்துரைஅம்மான்கடை உரிமையாளர்)



412,நாவலர்வீதி, அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை செல்லத்துரை ( இரத்தினண்ணர்)6.11.2007 திங்கட்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை-சின்னம்மா தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்ற செல்லையா -தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் மகேஸ்வரியின் (ரஞ்சி) அன்புக்கணவரும் ரவீந்திரன்,நல்லநாதன், மோகனதாஸ், கலாவதி,மோகனரஞ்சினி, கோமதி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜினோ,சகீரதா, நிரஞ்சினி,டிபாலதாஸ், தேவகுமார், பாலராஜ் ஆகியோரின் மாமனும்காலஞ்சென்ற கட்டடஒப்பந்த காரர் தருமலிங்கம், வீரசிங்கம் ஆகியோரின் அன்புச்சகோதரும் கனகாம்பிகை ,காலஞ் சென்றவர்களான கனகம்மா,அன்னபூரணி, மற்றும் பாலசிங்கம், கனகசிங்கம், கமலாதேவிஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற திலகேந்திரன் மற்றும் கட்டட ஒப்பந்தகாரர் தருமேந்திரன் (பாபு),ஜமுனாராணி, விஜயேந்திரன், வசந்தி,யுவனேந்திரன் ,ரேணுகா,இலகேந்திரன் ஆகியோரின் சிறிய தந்தையும் தேவா,ஆனந்தி, அரவிந்தன்(ஜீவா),ரஞ்சினி, மாலினி, ரசி,சுமதி, மதி ஆகியோரின் பெரியதந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 412,நாவலர்வீதி, அரியாலையில் உள்ள அன்னாரதுஇல்லத்தில் இன்று(9.11.2007) வெள்ளிக் கிழமை முற்பகல்9மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

412,நாவலர்வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

தகவல்:
மகேஸ்வரி (மனைவி).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09.11.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.